# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 | விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, பங்குனி 12உ (25—3—73) ஞாயிறு ஸபர் 19 — புத்தகம் 26 இதழ் 15


## 'உணர்ச்சிக்கவிஞரை விடுதலை செய்'

### கண்ணதாசன் தலைமையில் 'விடுதலைக்' கவியரங்கு!

கடந்த ஒன்பது திங்களாக எதுவித விசாரணையுமின்றி அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் கைதியாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டிருக்கும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் நாடும் குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டது.

கவிஞர் காசி ஆனந்தனை விடுதலை செய்யக்கோரி அண்மையில் சென்னையில் கவியரசு கண்ணதாசன் தலைமையில் 'காசி ஆனந்தன் விடுதலைக்கவியரங்கு' ஒன்று நடைபெற்றிருக்கிறது. இந்தக்கவியரங்கத்தை உலகத் தமிழ் இளைஞர் பேரவை ஒழுங்கு செய்திருந்தது. இக் கவியரங்கிற்கு வந்திருந்த கவிஞர்களை வரவேற்று, இளைஞர் பேரவையின் அமைப்பாளர் கலாநிதி இரா. ஜனார்த்தனம் எம். ஏ. வரவேற்புரை நிகழ்த்தினார்.

கவிஞர் காசி ஆனந்தனை விடுதலை செய்யக் கோரியும், இலங்கைத் தமிழர்களுக்கு சிங்கள அரசு இழைக்கும் அநீதிகளை

(7-ம் பக்கப் பார்க்க)

# மொழியடிப்படையில் தரப்படுத்தல் நடைபெற்றது உண்மை!

## கல்வியமைச்சின் அறிக்கையே இதை அம்பலமாக்கி விட்டது!

பல்கலைக் கழகத்துக்கு மாணவர்களைத்தெரிவுசெய்வதில் இன அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படவில்லையென்பதை விளக்குவதற்காக 'டெயிலி நியூஸ்' ஏட்டின் வேண்டுகோள்படி கல்வியமைச்சு அண்மையில் விடுத்த அறிக்கை 'அப்பன் குதிருக்குள் இல்லை' என்றது போல குட்டை அம்பலமாக்கி விட்டது

தமிழினத்துக்கு எதிராக பாரபட்சம் எதுவும் நடைபெறவில்லை என்று தமிழ் மாணவர்களை நம்ப வைப்பதற்காக கல்வியமைச்சினால் முக்கித்தக்கி, சுற்றிவளைத்து தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையில், மாணவர்கள் அந்தந்தப் பாடத்தில்பெற்ற புள்ளிகள், மொழி அடிப்படையில் தரப்படுத்தப்பட்ட பின்னரே கூட்டு மொத்த புள்ளிகள் கணக்கிடப்பட்டதாக திட்டவட்டமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது.

மொழி அடிப்படையில் புள்ளிகள் தரம்பிரிக்கப்படும் போது—இன அடிப்படையில் பாரபட்சம் நடைபெற்றிருப்பதும் நிரூபணமாகிவிட்டது என்று கல்வி நிபுணர் ஒருவர் இது பற்றிக் கருத்துத்தெரிவித்தார்.

கல்வியமைச்சுவெளியிட்ட அறிக்கைபற்றிக் கருத்துக் கூறிய ஒரு தமிழ் மாணவர், இத்தகைய வண்துடைப்பு அறிக்கைகளால் தமிழ்மாணவர்களை ஏமாற்றிவிடமுடியாதென்றும், உண்மையில் கல்வியமைச்சு இன அடிப்படையில் பாரபட்சம் காட்டவில்லையென்பதை உறுதிப்படுத்த விரும்பினால், மாணவர்களுக்கு பரீட்சை முடிவுகளைத் தரம் பிரித்து அனுப்பாது, புள்ளிகளை நேரடியாக வழங்க கல்வியமைச்சு முன்வருமா? என்றும் சவால் விடுத்தார்.

''1971ம் ஆண்டு பொறியியல் துறைக்கு சிங்கள மாணவர்களிலும பார்க்க தமிழர் அதிகமாகத் தெரிவு செய்யப்பட்டதைக் கண்டு இனவெறியும் பொறாமையும் பிடித்து மனம் குமுறிய சிங்கள ஆட்சி 'தரப்படுத்தல்' எனும் திட்டத்தைக்கொண்டு வந்து தமிழ் மாணவர்களின் கல்வி வாய்ப்பை பறிக்கும் முயற்சியில் இறங்கியது. இந்த ஆண்டு அதே பொறியியல் துறைக்கு 196 சிங்களவர்களும், ஆக 71 தமிழர்கள் மாத்திரமும் தெரிவு செய்யப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது — ஆட்சியாளரின் ஆசை தரப்படுத்தல் திட்டத்தால் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டதைக் காண முடிகிறது. இந்த மூன்று ஆண்டுகளுக்கிடையில் தமிழனின் அறிவுத்திறமை மங்கிவிட்டதென்றோ, சிங்களவனின் புத்தி கூடிவிட்டதென்றோ யாராவது கூறமுடியுமா?''

(4-ம் பக்கம் பார்க்க)

### முதலாளித்துவமும் சோசலிசமும் தமிழனை ஒழிப்பதில் இணைகின்றன!

''இந்தியர்களுக்கிருந்த வாக்குரிமையைப் பறிப்பதற்காக அதற்கேற்ற சட்டங்களை இயற்றியதன் மூலம் இந்தியர் பிரச்சினையை சமாளிப்பதற்கு ஆரம்ப நடவடிக்கையை மேற்கொண்டவர் காலஞ்சென்ற இலங்கையின் முதலாவது பிரதமரான டி. எஸ் சேனநாயகா அவர்களே. இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய காரியமாகும்.''

—பாதுகாப்பு வெளிவிவகார பிரதியமைச்சர் லட்சுமன் ஜெயக்கொடி (சட்டக் கல்லூரியில் பேசியது)

(டெயிலி நியூஸ் 9-3-73)

## விடுதலைப்போரில் குதித்திட கிழக்கும் தயார்!

### இராசமாணிக்கம் அறிவிப்பு



'ஈழத் தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்தில் குதித்திட கிழக்கு மாகாணம் ஒருபோதும் பின் நிற்க மாட்டாது. என்றும் உரிமைப்போரில் முன்னணி வகிப்பது கிழக்கு மாகாணம் என்ற பெருமையை கிழக்கு மாகாணம் ஒருபோதும் இழந்துவிடாது! அமைச்சர்களுக்கு எதிராக கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவதில் கிழக்கிலங்கைத் தமிழர்களும் இறங்கி விட்டனர்''

—இவ்வாறு தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி கூட்டத்தில் பேசுகையில் முழக்கமிட்டார்.

தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுவார்களானால் அஹிம்சை வழியில் எங்கள் உரிமைகளை மீட்கும் வரை தொடர்ச்சியான போராட்டம் நடத்துவோம் என எச்சரிக்கிறேன். இறுதி இலட்சியம் வெற்றிபெறும் வரை எங்கள் போராட்டம் தொடரும்.'' என்றும் திரு. இராசமாணிக்கம் கூறினார்.

'பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைத் தெரிவுசெய்யும் முறை மூடுமந்திரமாகவுள்ளது. புத்தூரில் உள்ள தமிழ் பிள்ளைகள மீது சிங்களம் போதனமொழியாகத் திணிக்கப்படுகிறது. இவற்றை எதிர்த்தே மாணவர்

(7-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் புத்த கோவில் திறப்பு! தெற்கில் இந்துக்களுக்கு கழுத்தறுப்பு!

பௌத்தர்கள் யாருமே இல்லாத காங்கேசன் துறையில் சிங்கள அரசின் பூரண ஆதரவுடன் புத்தர் கோவில் திறந்து வைக்கப்பட்டிருக்கும் அதே வேளையில், கொழும்பில் இந்து மதத்தவர்களுக்கு கழுத்தறுக்கும் வேலையொன்றையும் அரசாங்கம் செய்துள்ளது.

கொழும்புகொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு கட்டிடம் கட்டுவதற்கென காணியை வழங்கியிருந்த அரசாங்கம், கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்துடன் சேர்ந்து அக்காணியை திடுதிப்பென்று மீண்டும் சுவீகரித்து, இந்துக்களின் கழுத்தை அறுத்திருக்கிறது.

கொழும்பில் பல இலட்சம் ரூபா செலவில் இந்து மாமன்றம் கட்டவிருக்கும் ஐந்து மாடிகளைக்கொண்ட இந்து கலாசார நிலையமும், கட்டிமுடிக்கப்பட்ட பின்னர் இதே கதிக்குள்ளாகலாம் என்று கொழும்பு வாழ் இந்துக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு அரசு வழங்கிய காணி தற்போது எதுவித அறிவித்தலோ காரணமோ இன்றி திடீரென அரசால் சுவீகரிக்கப்பட்ட செயலானது, இந்நாட்டில் பரந்து வாழும் சைவ மக்களுக்கு இழைக்கப்பட்ட ஒரு பெரும் அநீதியென்றும் பொது மக்களிடம் பணமாகவும் பிடி அரிசியாகவும் திரட்டப்பட்ட பணத்தில் இக்காணிக்குள் கட்டப்பட்ட மண்டபம் பூர்த்தியாகும் நிலையில் காணியையும் மண்டபத்தையும் அரசு சுவீகரித்தது இந்துக்களுக்கு எதிரான ஒரு கழுத்தறுப்பு நடவடிக்கையே என்றும் இந்துக்கள் கருதுகிறார்கள்.

### உதவி அமைச்சர் யாழ் விஜயம் கைவிடப்பட்டது!

காங்கேசன் துறையில் பௌத்தகோவில் திறப்பு விழாவுக்கு கடந்தவாரம் செல்லவிருந்த பாதுகாப்பு வெளிவிவகார உதவியமைச்சர் திரு. லச்மன் ஜெயக்கொடி, கடைசி நேரத்தில் தமது யாழ் விஜயத்தைக் கைவிட்டார்.

## சுதந்திர ஈழம் அமைப்போம்!

'தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும்



### உடுப்பிட்டி சிவா அறை கூவல்!

அநீதிகள் துடைத்தெறியப்படாவிட்டால்—எங்களுக்கு வேறுவழியில்லை. இலங்கைத்தமிழர் தனியரசு ஒன்றை அமைத்து, எங்கள் அலுவல்களை நாங்களே பார்க்கவேண்டியதுதான். இதை அரசுக்கு ஒரு எச்சரிக்கையாக கூறி வைக்க விரும்புகிறேன்—''

—உடுப்பிட்டி சிவா (யாழ் முற்றவெளிக்கூட்டத்தில் பேசியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி. த. புஷ்பமாலா,
உரும்பராய் வடக்கு,

கே: அண்ணா தி. மு. க. வின் கொள்கைகளைத் தமிழர் கூட்டணி ஆதரிக்கின்றதா?

ப: அண்ணா எந்தெந்த கொள்கைகளை முன்வைத்து தமது இயக்கத்தை ஆரம்பித்தாரோ அந்தக்கொள்கைகளை தமிழர் கூட்டணி ஆதரிக்கும் என்று நம்புகிறேன்!

கே: நடிகர்திலகம் சிவாஜி கணேசனின் அரசியற்கொள்கைகள் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: சிவாஜிக்கென்று தனியான அரசியற் கொள்கை எதுவும் கிடையாது. சிண்டிகேட் காங்கிரஸின் கொள்கையே அவரது கொள்கை! சிண்டிக்கேட் காங்கிரஸின் கொள்கையை கடந்த பொதுத் தேர்தலில் அகில இந்திய மக்களும் நிராகரித்து விட்டார்களே!

ஃ

மார்க்கண்டு தனபாலன்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

கே: எம். ஜி. ஆரின் இன்றைய நிலைமை பற்றி தங்கள் கருத்து என்ன?

ப: தி. மு. க. வுக்கு அடுத்த செல்வாக்குள்ள கட்சியாக சிண்டிக்கேட் காங்கிரஸ் இதுவரை இருந்து வந்தது. இப்போது எம். ஜி. ஆரின் கட்சி அந்த இடத்தைப் பிடிப்பதற்கு வேகமுடன் முன்னேறுகிறது.

கே: காசி ஆனந்தனின் முகவரி என்ன!

ப: D-III வெலிக்கடை சிறைச்சாலை, கொழும்பு.

கே: 'சுந்தரி'க்கும் தினபதி ஆசிரியருக்கும் என்ன தொடர்பு?

ப: 'சுந்தரி'யின் 'கணவனும்' தினபதி ஆசிரியர் தான்!

ஃ

செல்வன் க. செல்வராசா,
இராமநாதபுரம்.

கே: 'அப்பா' 'துரை' தமிழர் கூட்டணி தமிழ் மக்களுக்கு ஒன்றும் செய்வதும் இல்லை செய்யப்போவதும் இல்லை என்கிறார். ஆனால் 'துரை' தமிழர்க்கு செய்த பெரும் உதவி என்ன?

ப: அம்மாவின் காலை விழுந்து நக்குவதென்பது எப்படி என்பதையும் காட்டவேண்டியதைக் காட்டி, கூட்டிக்கொடுக்கவேண்டியதைக் கொடுத்து 'லீலா' விநோதங்களை 'அனுராக'ங்களாக்கி எப்படியும் வயிறு கழுவலாம் என்பதையும் சொல்லிக் கொடுத்து வருகிறாரே தமிழர்களுக்கு...!

ஃ

எம். கே. ஜே. பிரேமலோசன்
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

கே: சுதந்திரன் பத்திரிகை 'முதல்வர் கருணாநிதியின் கருத்துக்களுக்கே முதலிடம் கொடுக்கின்றது, அதே வேளையில் எம். ஜி. ஆரின் கருத்துக்களை புறக்கணிக்கிறது. நடு நிலைமை வகிக்கும் நீங்கள் இப்படிச் செய்யலாமா?

ப: தவறு எங்களிலில்லை. தி. மு. கழக கருத்துக்களை கொண்ட ஏடுகளே சுதந்திரனுக்கு தமிழகத்திலிருந்து அனுப்பிவைக்கப்படுகின்றன. அண்ணா தி. மு. க. சார்பான ஏடுகள் எதுவும் அனுப்பிவைககப்படவில்லை. இது பற்றி எம். ஜி. ஆருக்கும் எழுதியிருக்கிறோம். இது வரை அவரிடமிருந்து பதில் வரவில்லை!

ஃ

சி. சண்முகரட்னம்,
பாலாவோடை,
காரைநகர்.

கே: அன்பால், பண்பால், அறிவால் பாசத்தால், நன்றியால் கருணையால் உயர்ந்த ஒரு மனிதன் யார்?

ப: பேரறிஞர் அண்ணா அவர்கள்!

கே: கூட்டு வழிபாட்டின் மூலம் மக்கள் என்ன பலனை அடையலாம் என்பதை அறியவிரும்புகின்றேன். இதுபற்றித் தங்கள் கருத்தென்ன?

ப, கூட்டு வழிபாட்டினால் மனிதனின் சுயநலம் கெடவும் பொதுநல எண்ணம் பரவவும் வாய்ப்புண்டு!

ஃ

சோ. சிவகுமாரன்,
ஆனைக்கோட்டை.

கே: அழகுதமிழில் ஆணித்தரமாக பதில்களை எடுத்தியம்பும் உங்கள் உண்மையான பெயர் என்ன?

ப: சாட்சாத் திருவாளர் குயுக்தியாரே தான்!

கே: வந்தாரை வாழவைக்கும் எம் ஈழத்தமிழன் இன்று மாற்றார் கை எதிர்பார்க்கும் நிலைமை ஏன்?

ப: தன்னாட்சி இழந்திருப்பதுதான்!

ஃ

இ. ரகுராமன்
கொழும்பு-6

கே: தமிழர்களுக்கு உரிமை வழங்கத்தான் வேண்டும் என்று டாக்டர் என். எம். பெரேரா கூற— உரிமைகள் எல்லாம் கிடைத்துவிட்டன என்று கூறிய தியாகராசாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: வஞ்சனை மிஞ்சிய நஞ்சன்!

ஃ

கே. யோகன்
வண்ணையூர்.

கே: மனிதன் எல்லாம் தெரிந்து கொண்டான் வாழும் வகை புரிந்து கொண்டான், இருந்தபோதும் அருளம்பலத்தாருக்கும், தியாகருக்கும் ஒன்று மட்டும் புரியவில்லை அது என்ன குயுத்தியாரே!...

ப: தன்மானம் என்றால் என்ன என்பது!

ஃ

எஸ். ஏ. வி.
மானிப்பாய்:

கே: 'ஹர்த்தால்' என்றால் என்ன என்பது பற்றி விளக்கம் தருக?

ப: டாக்டர் என். எம். நேரடியாக அதை பார்த்துத் திரும்பியிருக்கிறார். அவரைக்கேட்டால் நன்றாக கூறுவாரே!

கே: திருவாளர் குயுக்தியாரே, தங்கமூளை (தகரமூளை) என். எம். பெரேராவின் ''யாழ்தேஷ்'' வரவு என்னத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது?

ப: கைப்பற்றப்பட்ட பிரதேசத்துக்கு அந்தக் கால அரசர்கள் திக்கு விஜயம் செய்யும் அதிகார தோரணையில்!

ஃ

பா. வனஜா
பிரதான வீதி
கல்லடி

கே: இன்னும் எத்தனை மந்தி(ரி)மார் கீழ் மாகாணத்துக்கு வருவார்கள்?

ப: அடிமைத்தனமாக வரவேற்பு கொடுப்பதற்கு அங்கு எட்டப்பர்கள் இருக்கு மட்டும் வந்துகொண்டே தான் இருப்பார்கள்.

கே: இன்றைய நிலையில் பொருளாதார நெருக்கடியை யாரால் தீர்த்து வைக்கமுடியும்?

ப: நிச்சயம் தமிழனால் மட்டுமே முடியும்!

ஃ

ஏ. கே. தமிழ்ச்செல்வன்
கொழும்பு-14

கே: இன்பமும் துன்பமும் சந்திக்கும் இடம் எது?

ப: பிரசவ ஆஸ்பத்திரி!

---

# மக்கள் குரல்

## வியாபார ஆதாயமும் வருமான வரியும்

வர்த்தகத் துறையிலே ஈடுபட்டுள்ள தமிழ்பேசும் முதலாளிகள் அனேகர் ஒவ்வொரு வருடக் கணக்கையும் 31ம் திகதி மார்ச் மாதம் முடித்துக்கொண்டு அந்தந்த வருடத்துக்குரிய ஆதாயத்தில் பெருந்தொகையான பகுதியை ஆதாய வரியாக அரசாங்கத்துக்குச்செலுத்தி வருவதை வழமையாக்கிக் கொண்டுள்ளார்கள். இப்படிச் செலுத்திவரும் பெருந்தொகையான வியாபார ஸ்தாபகர்களுக்கு இதன் காரணமாக ஏதாவது சலுகைகள் அல்லது வேறு பிரதி உபகாரங்கள் அரசாங்கத்தால் கிடைப்பதாகத் தெரிந்துகொள்ளமுடியவில்லை.

இங்ஙனம் தொழில் செய்பவர்களின் ஸ்தாபனங்களில் கடமைபுரியும் ஊழியர்கள் முறையான அல்லது அவர்களின் தேவைக்கேற்ற வேதனங்களைப் பெறுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆகவே வருமான வரிக்காகச் செலுத்தும ஆதாயக் கணக்கில், இந்த ஊழியர்களுக்குக் கொடுக்கும் மாத வேதனத்தையோ வருட நன்கொடையையோ சற்று அதிகமாகக் கொடுத்துக் கழித்துக் கொள்ளலாம் அல்லவா? வருமான வரிக்காக அத்தொகையை இப்போதுள்ள நடைமுறைப்படி அடுத்த வருடத்துக்குள் செலுத்தும் தன்மைபோன்று, ஊழியர்கள் கணக்கிலேயே வருட நன்கொடையை வரவு செய்துகொண்டு மாதாந்த வேதனத்துடன் சேர்த்து சிறு சிறு தொகைகளாகக் கொடுத்து உதவினால் தொழில் ஸ்தாபகர்களுக்கும் சங்கடம் ஏற்படாமல் இருக்கும்.

ஆகவே அதிக வருமான வரி கொடுக்கும் வியாபார, தொழில் ஸ்தாபகர்கள், ஆழ்ந்து சிந்தனை செய்து ஊழியர்களுக்கு அவரவர் கணக்குகளில் வருட நன்கொடையை கணக்கில் வரவு செய்து கொண்டு எதிரே வரும் மார்ச் 31ம் திகதி கணக்குகளை முடித்துக் கொள்ளும் வண்ணம் இலங்கையில் உள்ள ஊழியர்கள் சார்பாக வேண்டிக்கொள்கிறேன். சோஷலிசம் பேசும் கனவான்களும் சிந்திக்கும் வண்ணம் கோருகிறேன்.

இங்ஙனம்,
செ. மாணிக்கவாசகர்
வவுனியா.

---

# புத்தூரில் சிங்கள பௌத்த திணிப்பு! ஆதரித்த பௌத்த சங்கத்துக்கு சாட்டை!

## புத்தூர் மக்களால் வெளியிடப்பட்ட பிரசுரம்!

இன்று புத்தூரில் எங்கள் குழந்தைகள் மேல் அரசாங்கம் சிங்கள பௌத்தத்தைத் திணித்து ஆக்கிரமிக்கும் போது, நிவாரண சேவையாக இந்து தமிழ்ப் பாடசாலையை நிறுவ கோப்பாய் பிரதிநிதி தமிழர் கூட்டணியின் சார்பில் இயங்குகிறார். இதை ஆட்சேபித்துத் துண்டுப் பிரசுரம் வெளியிட்ட போலிப் பௌத்த சங்கத்துக்குச் சில கேள்விகள்.

நீங்கள் உங்களை விற்று, எங்களையும் விற்க முயற்சி செய்து தனிப்பாடசாலையை நிறுவவில்லையா? சிங்கள பௌத்த தனிப்பாடசாலை நிறுவிய நீங்கள் இப்போது எங்கள் குழந்தைகளின் கல்வி உரிமையை நிலைநாட்டும் இந்து தமிழ்த் தனிப்பாடசாலையை எதிர்ப்பது ஏன்? உங்களுக்கு ஒரு நீதி, எங்களுக்கு வேறு நீதியா?

திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் பா. உ. ஆவதற்கு பல வருடங்களுக்கு முன்பே நீங்கள் பௌத்த சங்கமாக இயங்கும் போது உங்கள் அரசாங்கம் சோமஸ்கந்தாவை அரசாங்க பாடசாலையாகச் சுவீகரித்து நடத்தவில்லையா? அப்போது நீங்களும் உங்கள் அரசாங்கமும் எங்கள்பிள்ளைகளை சோமாஸ்கந்தாவில் சேர்க்காமல் வேறு தனிப் பள்ளிக்கூடம் தொடங்கியது எதற்காக?

உங்கள் சிங்கள பௌத்த அரசாங்கமும் நீங்களும்சாதி வேற்றுமை பாராட்டினீர்களா? அல்லது எங்களைத் தமிழர்களிடமிருந்து பிரித்து எங்களையும் உங்களைப்போல் சிங்களவருக்கு அடிமைகளாக்கவா?

நீங்கள் சமயம் மாறியதால் சாதியையும் மாற்ற முடிந்ததா? மாற்றிக்கொண்டீர்களா? உங்களை உயர்ந்த சாதியினர் என்று சிங்கள பௌத்தர்கள் ஏற்றுக் கொண்டார்களா?

அஸ்கிரிய மல்வத்தை பௌத்த சங்கங்களில் உங்களில் எவருக்காவது இடம் கிடைத்ததா?

தாய்மொழிக் கல்வியே குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது என்பது கல்வி நிபுணர்களின் தீர்ப்பல்லவா? இதை ஏற்று, அரசாங்கமும் ஆங்கிலத்தை நீக்கி தாய்மொழியான தமிழையோ, சிங்களத்தையோ அவ்வப் பிள்ளைகளுக்குப் போதனா மொழி ஆக்கியது. அப்படி இருக்க புத்தூரில் மட்டும் சிங்களபௌத்த அரசாங்கம் எங்கள் குழந்தைகள் மேல் சிங்களத்தை திணிப்பது ஏன்?

உயர்சாதி என்று கூறப்படும் குழந்தைகள் மேல் அரசாங்கமும் நீங்களும் ஏன் அப்படித் திணிக்கத் துணியவில்லை? இந்த ஆக்கிரமிப்புத்தான் உங்கள் பௌத்த தர்மமா?

சிங்கள பௌத்த திணிப்பைத் தாங்கமாட்டாதஎங்கள் குழந்தைகள் வேறு பள்ளிக்கூடத்திற்குப் போக முயற்சிக்க, அப்படி அவர்களை சோமாஸ்காந்தா மூதலிய வேறு பள்ளிக்கூடங்களில் சேர்க்கக்கூடாது என்று கட்டளை இட்டதுதான் பௌத்த தர்மமா? இன்றும் பெற்றோரும், எம். பி. யும் கேட்டபடி மேல் வகுப்புப் பிள்ளைகளையாவது சோமஸ்கந்தாவில் சேர்க்க நீங்களும், உங்கள் அரசாங்கமும் மறுப்பது ஏன்? எங்கள் பிள்ளைகள் நல்ல கல்லூரிக்குப் போய் நல்ல கல்வி பெறக் கூடாதா?

பல வருடங்களாக இருந்து வந்த சாதிகளை அரசியலமைப்புச் சட்டத்தால் ஒழிக்கவும், பாரபட்சமாக நடப்பவர்களைத் தண்டிக்கவும், சாதியால் பின்தங்கிய மக்களுக்குச் சலுகை செய்யவும் தமிழ்ப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கைகளை உங்கள் [illegible] [illegible] நீங்களும் அரசாங்கமும் சொந்த லாபமும் அரசியல் லாபமும் பெறுவது ஏன்?

பழைய அடிமைத் தனத்தை நாம் அகற்றும் போது புதிய அடிமைத்தனத்தில் ஏன் நீங்கள் புகுந்து கொள்ள வேண்டும். தமிழனுக்கு அடிமையாக இருந்த காலம் போனாலும், சிங்களவனுக்குப் புதிய அடிமையாக ஆகவேண்டும் என்று முன் நின்று அடிமைப் புத்தியை ஏன் வளர்க்கிறீர்கள்?

அரசாங்கத்தை ஏமாற்றி உத்தியோகம் பெறலாம் என்ற உங்களையே இன்று அரசாங்கமே ஏமாற்றி, நான்கு சிங்களவருக்கு முதலாம் வகுப்பில் படிப்பிக்க உத்தியோகம் கொடுக்கவில்லையா? இப்படிப் புத்திகெட்டும், மானங்கெட்டும் ஏமாந்த உங்கள் நிலையைப் பார்த்து சந்தி சிரிக்கவில்லையா?

அந்நியனுக்கு அடிமையாகி, ஏமாந்து அவன் எங்கள் குழந்தைகள் மேல் செய்யும் ஆக்கிரமிப்பிற்கெல்லாம் உடந்தையாக இருப்பது தான் உங்கள் புத்த தர்மமா?

புனிதமான புத்த பெருமானின் போதனையைப் பங்கப்படுத்தி புத்தூரில் புகலிடம் இல்லாமல் பட்டணத்தில் பதுங்கி இருக்கும் போலிப் பௌத்த சங்கமே பதில் சொல்.

— இவ்வாறு புத்தூர் மக்கள் சார்பில் புதுமை — ஆனந்தனால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரமொன்றில் பௌத்த சங்கம் வெளியிட்ட அறிக்கையொன்றுக்கு சுடச்சுடப்பதிலடி தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தைத் தொடருவோம்!

# 'பலனை' எண்ணிப் பாராமல்!

அன்பு நண்பா,

இத்திங்கள் 15ம் நாள் எம் தமிழ்க்குலத்து இளைய சமுதாயத்தினர்-மாணவமணிகள்-கட்டுப்பாட்டுடனும், ஒற்றுமையுடனும் நடத்திய பாடசாலைப் பகிஷ்கரிப்பு போராட்டம், வலிவுடனும் பொலிவுடனும் வெற்றிபெற்றது கண்டு பூரிக்காத தமிழ் இதயங்கள் இல்லை— மாணவ சமுதாயத்தை வாழ்த்தாத தமிழ் வாய்கள் இல்லை!

ஆம் நண்பா, அவ்வளவு தூரம் ஒன்றுபட்ட வீரசக்தியாக — மகாசக்தியாக தமிழ் மாணவ சமுதாயம் திரண்டெழுந்து, அமைதியான முறையில் ஆளவந்தார்க்கு தனது மனக் குமுறலை, கொந்தளிப்பினை, கோபத்தை, கட்டுப்பாட்டையும் கண்ணியத்தையும் இழக்காத முறையில் — காட்டியிருக்கிறது.

**எந்த சமுதாயமும் — அதுவும் விடுதலைப் போரில் இறங்கியிருக்கிற சமுதாயம்— கட்டுப்பாட்டுடன் இயங்காவிட்டால் தனது இலட்சியத்தில் வெற்றிபெற்றுவிடமுடியாது. தமிழர் சமுதாயத்தில் ஒற்றுமையும் கட்டுப்பாடு எனும்பண்பும் வளர்ந்துவருகிறது என்பதற்கு தமிழ் ஈழத்தில் கடைசியாக நடந்து முடிந்த மூன்று ஹர்த்தால்களும், தமிழ் மாணவ சமுதாயம் நடத்திமுடித்த பாடசாலைப் பகிஷ்கரிப்பு வெற்றியும் தகுந்த எடுத்துக்காட்டுக்களாக இருக்கின்றன.**

1970ம் ஆண்டு நவம்பர் 20ம் நாள்— 'தரப்படுத்தல்' என்ற சதித்திட்டத்தின்கீழ் உயர் கல்வித்துறையில் சிங்கள அரசினால் தமக்கு இழைக்கப்பட்ட பயங்கரக் கொடுமையை எதிர்த்து தமிழ் ஈழத்தின் மாணவ சமுதாயம் பொங்கியெழுந்து பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு—ஊரெங்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தி—கட்டுப்பாட்டுடன் தனது வலுவான எதிர்ப்பை ஆட்சியாளர்களுக்கும், அகில உலகுக்கும் எடுத்துக்காட்டியது! அன்று நடைபெற்ற அந்த பிரமாண்டமான ஊர்வலமும் கிளர்ச்சியும், தமிழ் ஈழத்தின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது என்பது உனக்குத் தெரியும்!

தமிழினத்தின் சுதந்திரத்துக்கும், சுயாதீனத்துக்கும் போராடியே தீர வேண்டும்—சுதந்திர தமிழ் ஈழம் அமைத்தாலே, மானம் மரியாதையுடன் தமிழினம் இந்நாட்டில் வாழ முடியும் என்பதை மாணவசமுதாயம் உணர்ந்து கொண்டதை அன்றைய போராட்டம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது!

அதன் பின்னர் நண்பா, தொடர்ந்து நடைபெற்றுவரும் இன விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் மாணவ சமுதாயமே நின்று வருகிறது என்பதை நீ அறிவாய்! குடியரசு அரசியல் சட்ட எதிர்ப்பு போராட்டத்தின்போது—1972 மே 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களும் மாணவ சமுதாயம் பூரணமாக ஒத்துழைத்தது! அக்டோபர் 2-ஹர்த்தாலின்போதும் மாணவ சமுதாயம் முன்னணிவகித்தது! இப்போது இத்திங்கள் 15ம் நாள், கட்டுப்பாட்டுடன் களத்தில் குதித்து—பகிஷ்கரிப்பு போராட்டத்தை வெற்றியாக்கித் தந்திருக்கிறார்கள் நம் இளம் தலைமுறையினர்!

**அவர்களை யாரும் பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கும்படி பலவந்தப்படுத்தவில்லை; கட்டாயப்படுத்தவில்லை; பாடசாலைக்கு சில மாணவர்கள் சென்று அவர்களுக்கு எதிராக மறியலில் வேறு பல மாணவர்கள் ஈடுபடவேண்டிய நிலையே தோன்றவில்லை. தாமாக — தமது கோரிக்கையிலுள்ள நியாயத்தை, உணர்ந்தும் தமிழன்னை வடிக்கின்ற கண்ணீரைக் கண்டு துடித்தும் — பாடசாலைகளைப் பகிஷ்கரித்திருக்கிறார்கள் மாணவ சமுதாயத்தினர்!**

மாணவர்கள் தெருவில் சுற்றித்திரிவார்கள்—கல்லூரிகளின் முன்கூடி மறியல் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுவார்கள்—ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள்—கட்டுப்பாடு குலைந்து அலைந்து திரிவார்கள்—அந்த நேரம் பார்த்து, அவர்களை—நம் கண்ணின் மணிகளை—அடித்து நொருக்கி விடலாம்; பிடித்து அடைத்துவிடலாம் —என்று கையில் துப்பாக்கிகளுடன் வேட்டை நாய்கள்போல் ஆவலுடன் காத்திருந்த சிங்கள அரசின் ஏவல்படைகளுக்கு ஏமாற்றத்தை பளித்துவிட்ட தம்பிகளைப் பாராட்டுகிறேன்!

சின்னச் சின்னக்காரணங்களைக் காட்டி நம் தங்கத்தமிழ் இளைஞர்களைப் பிடித்துச்சிறையிலடைத்து கொடுமைப்படுத்தும் கொடிர வெறிப்போக்கில் — ஏதேச்சாதிகார வெறியில் — இன்று தலைகால் தெரியாமல் ஆடுகிறது அதிகார வர்க்கம்! இந்த வெறிக்கு பலியாகாமலும் — அதே வேளையில் இயக்கத்தைத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திச் செல்லவும் நமக்கிருக்கின்ற ஒரே வழி, எச்சந்தர்ப்பத்திலும் அஹிம்சை நெறியைக் கைவிடாது — கட்டுப்பாட்டுடன் செயலாற்றுவதுதான்!

சிறை செல்லவேண்டிய சந்தர்ப்பம் வரும்போது சிறை செல்லத்தான் வேண்டும். விடுதலை வீரர்கள் சிறை செல்வதற்கு ஒரு போதுமே அஞ்சமாட்டார்கள். ஆயினும், ஒரு இயக்கத்தை இயங்கவிடாமல் செய்யும் திட்டமிட்ட சதி நோக்குடன்—இயக்கத்தின்முன்னணி வீரர்களாகச் செயல்படும் இளைஞர்களை காரணமின்றி சிறைக்குள் தள்ளும் பாசிசப் போக்கில் ஆதிக்க வெறி பிடித்தோர் ஈடுபடும் போது — அந்த வலைக்குள் — அந்தச் சதிக்குள் — நாமாகப் போய் விழக்கூடிய முறையில் நடப்பது ஒருபோதும் புத்திசாலித்தனமாகாது!

இதை உணர்ந்து கட்டுப்பாடு, கண்ணியத்துடன், அமைதியாகப் பாடசாலைப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவ சமுதாயத்தை மீண்டும் வாழ்த்துகின்ற அதே நேரத்தில் — இதே ஒற்றுமையையும், கட்டுப்பாட்டையும் தொடர்ந்து அவர்கள் வளர்த்து, வலுப்படுத்திவரவேண்டும் என்றும் என் அன்புத்தம்பிகளுக்கு கூறிவைக்கவிரும்புகிறேன்!

நண்பா, மாணவர்களின் பாடசாலை பகிஷ்கரிப்பினால் என்ன நன்மை கிடைத்து விடப் போகிறது? அவர்களின் கல்வி வீணாகிறதைத் தவிர—இப்படிச் சிலர் ஆங்காங்கே கூற ஆரம்பித்திருக்கிறார்கள். எதுவும் நடக்காவிட்டாலும், ஆட்சியாளருக்கு மக்களின் மனக்குமுறலை தெட்டத்தெளிவாக எடுத்

## அரசியல் மேடை

துக்காட்டிட அதுபயன்படுகிறது! எந்தநன்மையும்இல்லாவிட்டாலும்-அநீதியைஎதிர்த்தோம் அநியாயத்தை—அக்கிரமத்தை எதிர்த்தோம் என்றஆத்மீகத்திருப்தியாவது நம்இதயத்துக்கு ஏற்படுமல்லவா? எதுவித கிளர்ச்சியுமின்றி அமைதியாக இருப்பது — அநீதியான அடக்குமுறை சட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவது போன்றதாகும் அல்லவா?

நண்பா, உணர்ச்சிக்கவிஞர்காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா போன்ற துடிப்புமிகு இளைஞர்களையும், மற்றும் சிறைப்படுத்தப்பட்ட மாணவர்களையும் விடுதலைசெய்யக்கோரியும்—'தரப்படுத்தல்'எனும் சதித்திட்டத்தைத் தொடர்ந்து, உயர்கல்வி வழங்குவதில் இன அடிப்படையில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நீக்கும்படி கோரியும-தமிழ் மாணவர்களின் கல்வி மொழியாக சிங்களத்தைத் திணிப்பதை எதிர்த்தும், மாணவர்கள் இப்போராட்டத்தை நடத்தி முடித்திருக்கின்றனர்! மாணவர்களின் கோரிக்கைகளை ஆதரித்தும், தமிழினத்துக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்தும் தமிழர் கூட்டணித்தலைவர்களும் அன்றையதினம் உண்ணாநோன்பு இருந்து நமது போராட்டத்திலுள்ள நியாயத்தை சிங்கள ஆட்சியாளருக்கும் அகில உலகுக்கும் உணர்த்த முயன்றிருக்கிறார்கள்!

மாணவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவை; நீதியின் பாற்பட்டவை! கல்லூரிகளில் படிக்கவேண்டிய காளைகளைகாராக்கிருகத்தினுள் பூட்டிவைப்பதையும் —தகுதி, திறமை இருந்தும, தமிழ் மாணவர்களுக்கு இன அடிப்படையில் பல்கலைக்கழக உயர் கல்வியில் கடைந்தெடுத்த பாரபட்சம் காட்டப்படுவதையும்—ஒரு பிள்ளையின் தாய் மொழியே அப்பிள்ளையின் போதனா மொழியாக இருக்கவேண்டும் என்ற உலக கல்வி நிபுணர்களின் கருத்தையும், ஐ. நா. மனித உரிமைச் சாசனத்தையும் அலட்சியம் செய்து — தமிழ்க் குழந்தைகள் மீது வேற்று மொழியான சிங்களத்தை போதனா மொழியாகத்திணித்து, தமிழினத்தைகருவறுக்க முயலுவதையும்-நியாயமான செயல் என்று மனச்சாட்சியுள்ள எந்த ஒரு மனிதனும் ஒப்புக்கொள்ளமாட்டான்!

இத்தகைய அநீதிகளுக்கு எதிராக கொதித்தெழுந்து, குமுறுகின்ற மாணவர்களைப் பார்த்து—வகுப்பறையில் படிக்கவேண்டியவர்களுக்கு அரசியல் ஏன் என்று சிலர் கேட்கத் தொடங்கியிருக்கிறார்கள். அரசியலுக்குள் மாணவர்களை இழுத்து அவர்களைக் கெடுத்திடப் பார்க்கிறார்கள் என்று தமிழர் கூட்டணி மீது சிலர் குற்றம் சுமத்தவும் ஆரம்பித்திருக்கிறார்கள்!

மாணவர்களை அரசியலுக்குள் இன்று இழுத்துவிட்டிருப்பது தமிழர் கூட்டணியினரோ, அல்லது வேறு யாருமோ அல்ல! ஆட்சியாளரின் தமிழின விரோத நடவடிக்கைகளால் மாணவர்கள் தாமே உந்தப்பட்டு, அரசியலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்!

கல்லூரிகளில் — பாடசாலைகளில் — கல்வி கற்பதன் அடிப்படை நோக்கம், இந்நாட்டின் கௌரவமுள்ள—சுயமரியாதையுள்ள பிரஜைகளாக வாழவேண்டும் என்பதுதான்! ஆனால் தமிழ் மக்கள் புதிய அரசியலமைப்பின்கீழ், இரண்டாந்தர அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்போது—கல்விக்கூடங்களில் படித்து வெளியேறினாலும் பயன் ஏதும் இல்லையே!

இன்று தமிழ்க் குழந்தைகள் படித்து— நாளை பாடசாலைகளை விட்டு வெளிவரும் போது— அவர்களுக்கு உத்தியோக வாய்ப்பு இல்லை! திறமையும்தகுதியும் இருந்து பொறியியல், விஞ்ஞான மருத்துவத் துறைகளில் உயர் கல்விகற்க ஆசைப்பட்டாலோ அதற்குபல்கலைக் கழகக் கதவு அடைக்கப்படுகிறது! தொழில் செய்து முன்னேற தமிழ் இளைஞனுக்கு தடைக்கற்கள் பலவுள! இந்நிலையில் தமிழ் மாணவனுக்கு தனது எதிர்காலம் இருண்டு தெரிகிறது! எனவே அவன் வேறு வழியின்றி அரசியல் போராட்டத்துக்குள் தள்ளப்படுகிறான்!

ஆம் நண்பா—தமிழினத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற அடிப்படை நோயை அகற்றினால்மட்டுமே நிம்மதியும், எதிர்கால சுபீட்சமுமுண்டு என்பதை நம்முடைய தமிழ் மாணவ சமுதாயம் இன்று நன்கு உணர்ந்துவிட்டது. தமிழ்த் தேசிய இனத்தின் அடிமை நிலையை அறுத்தெறிந்து, சுயாட்சிபெற்றால் மட்டுமே— தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் சுதந்திரத்தை மீட்டால் மட்டுமே— எதிர்கால வாழ்வு எமக்குண்டு என்பதை இன்றைய தமிழ் மாணவ இளைஞர்கள் முற்றுமுடிவாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்—அதனால் சுதந்திரப் போரில் குதித்திடவும் அவர்கள் முடிவு செய்துவிட்டார்கள்!

**ஒரு இனத்தின் சுதந்திரப் போராட்டத்தில் மாணவ சமுதாயத்தினர் ஈடுபடுவதை யாரும் தவறென்று கூறிவிட முடியாது! எந்த ஒரு நாட்டின் சுதந்திரப்போராட்ட வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும்—மாணவர்களே அந்தப்போராட்டத்தின் ஈட்டி முனைகளாக இருந்திருப்பதைக் காணமுடியும்! மாணவர்கள் ஈடுபடாத எந்த ஒரு இயக்கமும் வெற்றிபெற்றதாக வரலாறும் இல்லை!**

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது — மாணவர்கள் அரசியலில் குதித்ததை மகாத்மா காந்திஜி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கண்டித்ததுமில்லை— தடுத்ததுமில்லை! ஆனால் அதைத் தட்டிக்கொடுத்து வரவேற்றார்! ஏன், மாணவர்களாக இருந்த தனது பிள்ளைகளையே பாடசாலைப் பகிஷ்கரிப்பு போன்ற போராட்டங்களில் ஈடுபடுத்த மகாத்மா ஒரு போதும் பின்வாங்கியதில்லை!

எனவே மாணவ சமுதாயம் — மூலைக்கு மூலை நின்று முணு முணுத்துத் திரியும் உணர்ச்சியற்ற மரக்கட்டைகளுக்கு செவி கொடுத்திடத்தேவையில்லை! தமிழினத்தின் சுதந்திரப் போராட்டத்துக்கு தலைவர்கள் அழைப்பு விடும்போதெல்லாம் கட்டுப்பாட்டுடன் களத்தில் குதித்திடத்தயாராக இருந்திட வேண்டும்! இன்றைய தமிழ் மாணவனுக்கு இருந்திடும் இன உணர்ச்சிபோல் —விடுதலை உணர்ச்சிபோல்—முன் எக்காலத்திலும் இருந்ததில்லையென்று கூற முடியும்! தமிழினம், தன் தங்கநிகர்க்காளைகளைக்கண்டு பெருமைப்படுகிறது! தமிழ் அன்னை மகிழ்ச்சிக் கூத்தாடுகிறாள்!

இந்நேரத்தில் நண்பா, பேரறிஞர் அண்ணா அவாகள் கூறிய ஒரு கருத்தையே சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்! இலட்சியம் வெற்றிபெற நமது கடமைகளைச்செய்துகொண்டு போவதுதான் நம் வேலையே தவிர விரைவில் பயன் கிடைத்திடவேண்டுமே என்ற 'பதைப்பு' ஏற்படக்கூடாது என்கிறார் அண்ணா. இது நம் இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் இன்றைய நிலையில் தகுந்த அறிவுரையாகும்! இதோ அண்ணன் கூறுகிறார், கேளேன் :-

'தடைப்பட்டுவிட்டதே, முட்டுக்கட்டை போட்டு விட்டார்களே, என்றெல்லாம் சிற்சில வேளைகளில் கடமை உணர்ச்சிகளால் உந்தப்பட்டுப், பயணத்தினை மேற்கொள்பவர்கள் கூட எண்ணி ஏங்குவது உண்டு; கலக்கமுற்று

(7 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## கல்வியமைச்சின் பித்தலாட்டம்!

ஒரு பிள்ளையின் தாய் மொழியே அப்பிள்ளையின் கல்விப் போதனை மொழியாகவும் இருந்திடவேண்டும் என்ற எவராலும் மறுக்கமுடியாத அடிப்படை மொழியுரிமையை—ஓர் இனத்தின் பிறப்புரிமையை—முற்றாக மறுத்து, தமிழ் குழந்தைகளின் மீது சிங்களத்தை போதனை மொழியாகத் திணித்து, இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஏதேச்சாதிகாரமாக ஈடுபட்டுவரும் கல்வியமைச்சு, தனது பாஸிஸ கொள்கைக்கு விளக்கமளித்து ஓர் பித்தலாட்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கை முழுப் பொய்களும் புனைசுருட்டும் நிறைந்ததாகவே காணப்படுகிறது.

தாய் மொழி மூலம் கல்வி பெறுவது ஒரு பிள்ளையின் அடிப்படை உரிமை இந்த அடிப்படை உரிமையை மீறி புதூர் பன்னசிக பாடசாலையில் தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட தமிழ்பிள்ளைகள் மீது சிங்களத்தைக் கல்விமொழியாக சிங்கள அரசு திணிக்கிறது என்பதே இன்றுள்ள குற்றச்சாட்டாகும்.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதாக கூறிக் கொண்டு கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை, தமிழ்மக்களுக்கு மேலும் ஆத்திரத்தையும் கோபத்தையும் கிளறுவதாகவே அமைந்திருக்கிறது.

முந்திய தேசிய அரசாங்கத்தின் காலத்திலேயே வட இலங்கையில் நான்கு பௌத்த பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டதாகவும், இதை அப்போது அரசாங்கத்துடன் சேர்ந்திருந்த தமிழர் கட்சிகள் எதிர்த்து தடுத்துநிறுத்தவில்லையென்றும் கூறுகிறது கல்வியமைச்சின் அறிக்கை.

இது கடைந்தெடுத்த பொய்யாகும். பின் தங்கிய வகுப்பிலுள்ள சில ஏழைகளை — வறுமை நிலையிலிருந்த தமிழ் மக்களை — ஆசை காட்டியும் சலுகைகள் செய்தும், அப்போதிருந்த கல்வியமைச்சரின ஆதரவுடன் பௌத்தமதத்துக்கு மாற்றுவதற்கு செய்யப்பட்ட தூண்டுதல் நடவடிக்கைகளை தமிழரசுக்கட்சி கடுமையாக எதிர்த்தது. மதமாற்றம் என்பது இன ஒழிப்புக்கு முதல்படி என்று அன்றே திட்டவட்டமாகக் கூறினோம். இன்று அது அப்படியே உண்மையாகிவிட்டது.

ஆம். இந்நாட்டில் பௌத்த மதத்துக்கு ஒரு தமிழன் மாறினால், அவன் தனது மொழி கலாசாரம், பண்பாடு அனைத்தையும் துறந்து சிங்கள மொழி,கலாசாரத்தைஏற்று சிங்களவனாகி விடவேண்டுமென்பதுதான் சிங்கள அரசாங்கத்தின் சித்தாந்தமாகும்.

தேசிய அரசாங்க காலத்தில் இப்பௌத்த பாடசாலைகளில் தமிழ் மொழிதான் போதனாமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது; நடைமுறையிலிருந்தும் வந்தது. ஆனால் இப்பொழுது, இந்த அரசாங்கத்தின் கீழ் தான், முதன் முதலாக சிங்களம் போதனாமொழியாக்கப்பட்டிருக்கிறது. பௌத்த பாடசாலைகளல்ல — பௌத்த பாடசாலைகளில் படிக்கும் தமிழ் குழந்தைகளுக்கு சிங்களத்தை பாடமொழியாக்குவதைத்தான் தமிழினம் இன்று எதிர்த்து நிற்கின்றது.

இப்பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள், அரசாங்கம் கூறுவது போல் உண்மையிலேயே தமிழ் பௌத்தர்களாக இருந்தால்—அவர்களுக்கு "பௌத்த சூழ் நிலையில்" கல்வி போதிக்க விரும்பினால்—அதற்காக, சிங்களத்தை பாட மொழியாகத் திணிப்பது எப்படி நியாயமானதாகும்? தமிழ் மூலம் பாடங்களை ஏன் போதிக்க முடியாது? பௌத்தத்தை படிக்க விரும்பினால், அதைச் சிங்களம் மூலம் தான் படிக்க வேண்டுமா? தமிழ் மூலம் ஏன்படிக்க முடியாது? சிங்கள மொழி தோன்றுமுன்னரே பௌத்த மதத்தைத் தமிழில் படித்துணர்ந்தவர்கள் தமிழர்கள்!

இதிலிருந்து தெளிவாகத் தெரியும் உண்மை என்னவென்றால்—பௌத்த மதப்போர்வையில், தமிழர்களை சிங்களவர்களாக்கும் இனக்கொலை முயற்சியில் இந்த அரசு வெளி வெளியாக இறங்கியிருக்கிறது என்பதுதான்!

பெற்றோர் விருப்பத்தின் படியே சிங்களத்தைப்போதனா மொழியாக்குகிறோம் — சிங்களத்தை நாங்கள் பலவந்தமாகத் திணிக்கவில்லை என்கிறது கல்வியமைச்சு. போதிய கல்வியறிவற்ற பெற்றோர்களுக்கு ஆசைகாட்டி மோசம் செய்து சிங்களத்தை போதனாமொழியாக ஏற்கும் கடிதத்தில்—எப்போதோ கையெழுத்து வாங்கியிருக்கலாம்—ஆனால் அதே பெற்றோர் இன்று சிங்களத்தை போதனா மொழியாக ஏற்க முடியாது என்று தீர்மானம் போட்டிருப்பது மட்டும் கல்வியமைச்சரின் செவிகளில் ஏன் ஏறவில்லை என்கிறது?

கல்விச்சட்டத்தில் ஒரு விதியின் படி—ஒரு பிள்ளையின் பெற்றோர் விருப்பப்படி தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களத்திலோ சிங்களப்பிள்ளைகளுக்கு தமிழிலோ கல்வி கற்பிக்கலாம் என்று கூறுகிறது கல்வியமைச்சு!

இந்த விதியை தமிழினம் ஒருபோதுமே ஏற்றது கிடையாது. முந்திய அரசாங்கத்தில் இருந்த போதும், தமிழர் கட்சிகள் போதனாமொழியைத் தெரிவு செய்யும் உரிமை பெற்றோர்களிடம் இருக்கக்கூடாதென்றும், தாய் மொழியே போதனாமொழி என்பது திட்டவட்டமாக சட்டத்தில் வரையறுக்கப் படவேண்டும் என்றும் போராடி வந்திருப்பதை நாடறியும்.

இதனால்தான் அரசியல் சட்டத்திலேயே தாய்மொழியே போதனாமொழி என்னும் சரத்து இடம் பெறவேண்டும் என்று தமிழ் மக்கள் கோரினர். இந்தக்கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டு, சிங்கள அரசு இப்போது, தமிழ்க் குழந்தைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்கிறது.

"பெற்றோர் விருப்பம்" என்று கூறி விட்டோ — அல்லது வேறு எந்த சாட்டுக் கூறியோ — தமிழ் பிள்ளைகளிடம் போதனா மொழியாக சிங்களத்தை திணிப்பதை தமிழினம் ஒருபோதும் பொறுத்துக் கொண்டிருக்காது இது தமிழினத்தின் ஜீவாதாரப்பிரச்சினை; உயிர்ப் பிரச்சினை; தமிழினம் தமிழினமாக வாழ்வதா இல்லையா என்பதை நிர்ணயிக்கின்ற பிரச்சினை; பிறப்புரிமை பற்றிய பிரச்சினை.

இப்பிரச்சினையில், தமிழினத்தின் பிறப்புரிமையை இந்நாட்டின் அரசியல் சட்டத்தில் தமிழினம் ஒரணியாகத் திரண்டு நிலைநாட்ட வேண்டுமென்று அறைகூவி அழைக்கிறோம்.

# தாய் மொழியில் போதனை தமிழினத்தின் பிறப்புரிமை! இதை மறுப்பது மாபெரும் அநீதி!

## 'ஈழநாடு' எழுதிய சூடான தலையங்கம்!

### இனவெறிபிடித்த டெயிலிநியூசுக்குச் சாட்டை!

'தமிழரின் அரசியலில் புதுமையான முரண்பாடுகள் காணப்படுகின்றன. அடிப்படை உரிமைகளைப் பற்றி அதிகம் பேசும் தமிழர் கூட்டணி தமிழ் பெற்றோர் தமது பிள்ளைகளைச் சிங்களமொழிமூலம் கற்பிக்கும் அடிப்படை உரிமையை மறுக்க முயல்வது ஆச்சரியமானது.

—இவ்வாறு டெயிலி நியூஸ் பத்திரிகை நேற்றைய முன் தினம் வெளியாகிய பிரசுரத்தின் தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது அடிப்படை உரிமைக்கு ஓர் அகலமான ஆழமற்ற விமர்சனம் போல் நமக்குத் தோன்றுகிறது. இந்தப் பிரச்சினையையிட்டு தீர்க்க ஆலோசனையை அரசு நடத்திக்கொண்டிருக்கும் இவ் வேளையில் இப் பிரபல பத்திரிகை இதற்கு முடிவுகட்டி விடுவது மிகவும் வியப்புக்குரியது. வருத்தமானதும் கூட.

குழந்தைக்கு இயல்பான மொழி தாய்மொழி. தாய் மொழி மூலம்தான் ஒருவர் தனது உணர்ச்சிகளையும் தெளிவாக வெளியிட முடியும். அவரது ஆளுமை படைப்பாற்றல் வளரும். மொழி என்பது நாகரிகம், கலாச்சாரம், பாரம்பரியம், எழுச்சி, உயர் விளக்கம், நினைவாற்றல், அகக்காட்சி, மன எழுச்சி, ஆராயும் திறன், சிந்தனை ஆற்றல் ஆக்கத் திறன், கற்பனைத்திறன் ஆகிய யாவும் தாய்மொழி மூலமே உயர் நிலை அடையும்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு விஜயம் செய்த உலக மகாகவி ரவீந்திரநாத் தாகூர் இவ்வழகிய தீவின் பெருமையை உலகுக்கெடுத்துரைக்க ஒரு கம்பன், ஒரு பாரதி இன்னும் உருவாகவில்லையென்ற கவலையைத் தெரிவித்ததுடன் தாய்மொழி மூலம் கல்வி அமையாததே இதற்குக் காரணமாகும் என்று அடித்துக் கூறினார்.

தேசப்பற்று மொழிப் பற்று மூலம்தான் வளரும். மொழிப்பற்று தாய் மொழி மூலமே வளரும். நமது போதனா மொழித் தேர்வு நமது வாழ்வை மட்டுமல்ல, நமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வையும் நிர்ணயிக்கும். போதனா மொழியைமாற்றி மக்களின் முழுமையை மாற்ற எத்தனித்த ஏகாதிபத்தியங்கள் தங்களைத் தாமே அழித்துக்கொண்டதற்கு வரலாறு சான்றுபகரும்.

ஆயிரம் ஆண்டுகளாகப் பேச்சு வழக்கில் இல்லாத வேல்ஸ்மொழி, வேல்ஸ் பிரதேசத்தில் உரிய இடத்தைப் பெற்றுவருகிறது. இம்மக்களின் தேசிய உணர்வினாலும் நியாய வரப்புக்குட்பட்ட எதிர்ப்பினாலும், வேல்ஸ்மொழி படிப்படியாக நிர்வாக மொழியாக மட்டுமல்ல, போதனாமொழியாகவும் இடம்பெறுகிறது. இதன்மூலம் வேல்ஸ் மக்களின் தனித்துவமும் பண்பும், கலாச்சாரமும் சுதந்திரமும் பாதுகாக்கப்படுகிறது.

கூட்டுறவு, சமதர்மத்தில் ஓங்கி வளரும் டென்மார்க் நாடு போதனாமொழி இயக்கத்தின் மூலமே 19ம் நூற்றாண்டில் அரசியல் விடுதலை பெற்றது. மேற்கு இந்தியத் தீவான பூட்டோறிக்கோ மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, தாய்மொழி இயக்கம் மூலமே போராடி வெற்றியும் கண்டனர்; இங்கு இன்று போதனா மொழி ஸ்பானியம்.

ஐக்கிய தேசியக்கல்வி விஞ்ஞான கலாச்சாரச்சபை -யூ என் எஸ் கோ ஏற்றுக் கொண்ட மனித உரிமைச் சாசனத்தின்படி மாணவர்களின் தமிழ்மொழிபோதனா மொழியாக இருப்பது அவனது அடிப்படை உரிமையாகும். எம்மாணவனுக்கும் தாய்மொழியே போதனாமொழி என்று கூறி-ஆனால் பெற்றோரின் விருப்பப்படி சிங்களம் அல்லது தமிழ் போதனாமொழியாக இருக்கலாம் எனும் கருத்து ஒன்றிற்கு ஒன்று முரணானதாகும்.

1945ம் ஆண்டு தொடக்கம் தாய்மொழிப் போதனா மொழிக் கொள்கை படிப்படியாகச் செயல்பட்டு வருகிறது. ஆனால் 1970ம் ஆண்டில் மகாதேசாதிபதி ஆற்றிய சிம்மாசன உரையில் மாணவர்களின் போதனாமொழி சுயமொழிகளாக இருக்கும் என்று பொதுப்பட உரைத்தார்கள். இக்கருத்தினை நாம் நுணுகி ஆராயவேண்டும்.

அண்மையில் கல்விஅமைச்சினால் வகுக்கப்பட்ட 6ம் வகுப்புக் கலைத் திட்டத்தில் 'முதல் மொழி என்னும் பதம் பாவிக்கப்பட்டுள்ளது. முதல்மொழியே போதனாமொழி என்னும் வியாக்கியானம் தரப்பட்டுள்ளது. தாய் மொழியும் முதல்மொழியும் ஒரே கருத்தினைத் தரும் சொற்கள் அல்லவென்பதை நாம் மறத்தலாகாது.

ஆங்கில மொழிமூலம் படித்து தமது பிள்ளைகள் நல்ல பதவியை வகிக்கவேண்டுமென்று, தேசப்பற்றுச் சிறிதுமல்லாத பெற்றோர்கள் குடும்பமாகவே நாட்டைவிட்டுச் செல்கின்றனர். தமது பிள்ளைகளுக்கு எது நல்லது என்ற ஞானமற்ற பெற்றோர் எத்தனைபேர் ஒரு கோப்பை கூழுக்குத் தமது பிறப்புரிமையை விற்றுள்ளார்கள் என்பதை அறிவோம். அற்ப சலுகைகளுக்காக ஆழ்ந்த கல்வி ஞானத்துக்கு பூரண வளர்ச்சிக்கும் இன்றியமையாத தாய் மொழியை பெற்றோர் விருப்பத்துக்கு விடுதல் தர்மமா?

சோவியத் குடியரசு அரசியல் திட்டத்தில் ஒவ்வொரு மாணவனின் போதனாமொழியும் தாய்மொழியாகவே இருக்கவேண்டுமென்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பிறப்புரிமையைப் பெறுவதற்கும் விவாதம் வேண்டுமா?''

—ஈழநாடு (ஆசிரியர் தலையங்கம் (21-3-73)

## மொழியடிப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

— இவ்வாறு அந்த மாணவர் பேலும் கேட்டார்.

'மாணவர்கள் திறமை அடிப்படையில் பெறும் புள்ளிகளை கல்வியமைச்சு அப்படியே பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு அனுப்பி வைப்பதில்லை. புள்ளிகளை மொழி அடிப்படையில் தரப்படுத்தி, அவ்வாறு தரப்படுத்தப்பட்ட புள்ளிகளையே பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கிறது இப்படி கல்வியமைச்சு இதில் தலையிடாமல், புள்ளிகளை அப்படியே நேரடியாகப் பல்கலைக்கழகத்தினருக்கு அனுப்பி வைக்கத் தயாரா? என்றும் அந்த மாணவர் கேட்டார்.

1972ம் ஆண்டு பல்கலைக் கழக நுழைவு சம்பந்தமாக பின்பற்றிய அதே நடைமுறையையே இம்முறையும் பின்பற்றியதாக கல்வியமைச்சின் அறிக்கைமேலும் கூறுகிறது. 1972ம் ஆண்டு பின்பற்றிய முறைபற்றி அண்மையில் வெளிவந்த அரசாங்கக்கட்சி ஏடான 'நேஷன்' ஏட்டில் பேராதனை 'காயபஸ்'சைச் சேர்ந்த ஏ. கே. டி. என்பவர் எழுதியுள்ள கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்:-

"1972ம் வருடத்திலே சற்று வேறான முறைகையாளப்பட்டது. இது அதிக குழப்பமானது. என்றாலும் இதுவும் ஒரு இன வேற்றுமை முறைதான். ஒரு மொழிமூலம் அதிகமான சராசரிப்புள்ளிகளைப் பெற்றவர்களை, மற்றொரு மொழி மூலம் குறைந்த சராசரிப்புள்ளிகள் பெற்றவர்களின் நிலைக்குமட்டுப் படுத்துகிறார்கள்."

இவ்வாறு அக்கட்டுரையாளர் கூறுகிறார். இது உண்மையானால்—இந்தமுறையே இந்த ஆண்டும் பின்பற்றப்பட்டது என்று அமைச்சின் அறிக்கை கூறுவதை நோக்கும்போது—இது அப்பட்டமான இனவேற்றுமையன்றி வேறென்ன? என்று கேட்கிறார்கள். தமிழ் மாணவர்கள்.

## மட்டுநகரில் தமிழர் கூட்டணி மத்திய செயற்குழு

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவின் கூட்டம் இம்மாதம் 25ம் நாள் (இன்று) மட்டுநகரில், முன்னாள் செனட்டர் திரு. மு. மாணிக்கம் அவர்களின் இல்லத்தில் தமிழர் தந்தை செல்வா தலைமையில் நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழர்களின் செல்வாக்குள்ள அரசியல் இயக்கம் தமிழர் கூட்டணியே!

## இந்த உண்மையை அங்கீகரித்து தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துக!

## அரசுக்கு 'டைம்ஸ் ஆப்சிலோன்' அறிவுரை!

'யாழ்ப்பாணத்தில் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா வெளியிட்ட ஆதரவான கருத்துப்போல அரசாங்கத்திலுள்ள வேறு எந்தப் பேச்சாளரும் அண்மைக் காலத்தில் வெளியிட்டதாக நமக்கு ஞாபகமில்லை. தமிழர்களுக்கும் பிரச்சினைகள் உண்டு என்பதை டாக்டர் பெரேரா ஒப்புக் கொண்டிருக்கிறார். தமிழர்களின் சகல பிரச்சினைகளையும் அரசாங்கம் தீர்த்து விட்டதாக அதே கூட்டத்தில் வடபகுதி எம். பி. ஒருவர் தெரிவித்த கருத்தை பொருட்படுத்தாமல் தள்ளி விடுவோம்.

'அரசாங்கத்தலைவர்கள், பிரச்சினைகளை கேட்டுத் தீர்த்து வைக்க ஆவலுடன் இருப்பதாகவும், இரு இனத்தின் பிரதிநிதிகளும் உட்கார்ந்து பேசி பிரச்சினைகளுக்கு சமாதானமான தீர்வு காணவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'தமிழர் கூட்டணியின் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டமும், பகிஷ்காரமும் எந்த பிரச்சினைகளையும் தீர்க்காது என்றாலும் — இந்த நிலைக்கு அவர்களும் தமிழ் இனமும் தள்ளப்பட்டதற்கு காரணம், அவர்கள் நீதியை பெற முடியாமற்போனது தான்.

'தமிழர் கூட்டணிதான் மிகப்பெரும்பாலான தமிழர்களின் அரசியல் ஆதரவையும் விசுவாசத்தையும் பெற்றுள்ளது என்ற உண்மையை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை ஏற்க மறுத்து போலித்தனமாக நடிப்பதோ — தமிழர் கூட்டணியின் தலைக்கு மேலாக, தமிழர்களுக்கு வேண்டுகோள் விடுத்தலோ வெற்றியளிக்கக் கூடிய முறையல்ல. இந்த உண்மையை அங்கீகரிப்பது போல இருக்கிறது டாக்டர் என். எம்.மின் யாழ்ப்பாணப்பேச்சு.

'இரு இனத்தவர்களுக்குமிடையேயுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்கு ஆரம்ப நடவடிக்கை அரசின் பக்கத்திலிருந்தே வரவேண்டும். அதிகாரத்திலுள்ள அரசாங்கமே முதலில் முன் வந்து சமாதானப் பேச்சுக்களுக்கு சைகை காட்ட வேண்டும். அப்படிப்பட்ட சைகை வருமானால், தமிழ்த் தலைவர்கள் அதை உதாசீனம் செய்வார்கள் என்று நாம் எண்ணுவதற்கு எந்தக் காரணமும் கிடையாது. ஆனால் இதன் தொடக்கம், அரசாங்கத்தின் கைகளிலேயே இருக்கிறது என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

'தமிழர் கூட்டணித்தலைவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதன் மூலம், அரசாங்கம் டாக்டர் என். எம். பெரேராவின் வார்த்தையை செயலாக்கும் என்று நம்புகிறோம்.''

—இவ்வாறு 15-3-73 'டைம்ஸ் ஆப் சிலோன்' ஆசிரியத் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## சுடச் சுட . . .

''சட்டரீதியான த. கா. எங்களுடையதே''

—தியாகராசா அறிவிப்பு

—இந்த இரண்டு த. கா. வாதிகளும் 1970 தேர்தலில் எடுத்த பிச்சைகளையும் ஆடிய காவடிகளையும் தமிழ் மக்கள் மறந்து விடவில்லை. ஆனால் இவ்விருவரும் மறந்து விட்டார்கள். த. கா. தலைமைப்பீடத்தின் உதையால் எழுந்த வலியில் இன்னும் பிதற்றுகிறார்கள் இந்தக் குருலை மிஞ்சிய சீடர்கள்.

ஃ

'விவசாயி ஓய்வு பெறும் போது வட்டியுடன் கிடைக்கும்'

—காணி அமைச்சர்:

—சிங்கள விவசாயிக்குவட்டியுடன் கிடைக்கும். தமிழ் விவசாயிக்கு வட்டியுடன் உதைதான் கிடைக்கும்.

ஃ

புதிய கட்சி ஆரம்பிக்கும் நோக்கம் இல்லை.

—கெனமன்

—கொழும்பில் ஒரு மகாநாடும் அக்குரஸ்ஸவில் ஒரு மகாநாடும் நடாத்திய போதே இவர்களின் ஒற்றுமையைக் கண்டு கொண்டோம்:

ஃ

'ஐ. தே. க: வுடன் இருந்த போது தமிழ் உரிமைகள் நினைவு வரவில்லையா?'

—ராஜபக்ஸ

—'யாழ் வந்து கறுப்புக் கொடி காணும் வரை தமிழர் பற்றி நினைவு வரவில்லையா' என அமைச்சரைத் தமிழர் கேட்கிறார்கள்.

ஃ

'மாதகலில் வீதியோரமாகப் பறக்கவிடப்பட்ட கறுப்புக்கொடியொன்று பொலிஸாரால் அகற்றப் பட்டது'

— செய்தி

—'1971 சித்திரையில் பொலிஸாரின் காலவண்ணம் நன்கு கண்டோம். 1972 பங்குனியில் பொலிஸாரின் கைவண்ணம் மாதகலில் கண்டு கொண்டோம்'

ஃ

'மாவட்ட ரீதியில் தமிழ் நிருவாக மொழியாகும்'

—கெனமன்

—தேசியப்பேரவையில்இவ்வாறு கூறினால் விக்கிரம சிங்காவிற்கு நடந்தது தமக்கும் நடக்கும் என அறிந்துதான் போலும், சிங்களத்துக்கும் பௌத்ததிற்கும் அரசியலமைப்பில் அந்தஸ்து அளித்து விட்டுத் தமிழுக்கு யாழ்: மேடையில் உரிமையளிக்கிறார் கெனமன். வாய்ச் சொல்லில் வீரரடி இவர்.

ஃ

'மணியோடர் பொருளாதாரத்தை நம்பத் தேவையில்லை'

—கெனமன்

தமிழ் மக்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் அரசினரால் படிப்படியாக மறுக்கப்பட்டு வருவதனை மறைமுகமாகத் தெரிவித்துள்ள அமைச்சருக்கு நன்றி.

ஃ

'பௌத்த குருமார் தமிழ் படிக்க ஆர்வம்'

—செய்தி

—பௌத்த குருமார்களே, பண்டா—செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்படவும், மாவட்ட சபை மசோதா கைவிடப்படவும் இன்னும் பலவற்றிற்கும் காரணமாக இருந்தவர்கள். இவர்களால் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அனர்த்தங்களை விபரிக்க,

விரும்பும் தமிழிலேயே வார்த்தைகள் இல்லை.

ஃ

'தமிழில் கடற்றொழில் பயிற்சிப் பாடசாலை திறக்க வந்த எனக்கா கறுப்புக் கொடி'

—ராஜபக்ஸ்

—புத்தூரில் தமிழ்க் குழந்தைகள் தமது தாய் மொழியில் கல்வி கற்கும் உரிமையை மறுத்துள்ளது இந்த அரசு. தமிழ்மொழியில் வகுப்புகள் நடாத்தப்படும் எனக் கூறித் திறந்து வைக்கும் இந்தக் கடற்றொழில் பயிற்சிப் பாடசாலையில் சிங்களமே போதனமொழியாக்கப்பட மாட்டாதென்பதற்கு என்ன உத்தரவாதம்? சொல் ஒன்றும் செயல் வேறொன்றுமாகவுமுள்ள இந்த வேஷதாரிகளுக்குக் கறுப்புக்கொடி காட்டாது வேறென்னவாம் காட்டுவார்கள், தமிழ் மக்கள்?

ஃ

'பொருளாதார நெருக்கடியிலிருந்து நம்நாடு மீட்சி பெற வேண்டுமானால் நாம் எல்லோரும் இன வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடனும் விடாமுயற்சியுடனும் கடினமாக உழைக்க வேண்டும்'

—ராஜபக்ஸ

—'ஆறு கடக்கும் வரை அண்ணையும் தம்பியும். ஆறு கடந்த பின் நீ யார்? நான் யார்? என்ற கதைதான் நினைவுக்கு வருகிறது.

ஃ

'திருமதி அமிர்தலிங்கத்தின் கறுப்புச் சேலையைக் கண்டு எனது மனைவி பயப்படமாட்டார்'

—ராஜபக்ஸ:

—காண்பவர் பயப்பட வேண்டும் என்றோ காண்பவர் பயப்படும்படியாகவோ சேலை அணியும் பண்பாடு தமிழ் மக்களிடம் இல்லை. மானம் காக்கவே தமிழ் மக்கள் சேலை அணிபவர்கள். அமைச்சரின் மனைவிதான் கறுப்புச் சேலையைக் கண்டு பயப்படவில்லையே அல்லாது அமைச்சர் பயந்தாரோ என்னவோ...?

—''கடுகு''

# 'தமிழர் பண்பாட்டுக்கேற்ப பாடநூல்கள் மாற்றப்பட வேண்டும்!

## கல்வியமைச்சருக்குப் பண்டிதர் கடிதம்!

''தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களத்தைப் புகுத்தியும் தமிழ் மாணவர்களுக்குச் சிங்களத்தைக் கல்வியூட்டும் மொழியாக்கியும் தமிழினத்தைச் சிதைத்துத் தகுதி பெற்ற தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் சேர்வதைத் தரப்படுத்தல் சீர்ப்படுத்தல் எனும் போர்வைகளினால் குறைத்து இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு மாபெரும் அநீதி செய்து வரும் உங்கள் கல்வி அமைச்சு தமிழ்மொழிக் கொலையிலும் ஈடுபட்டுள்ளதென்பதை இந்த அமைச்சின் கீழுள்ள கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்ட 'தமிழ் 6' 'தமிழ் இலக்கியத்தொகுப்பு (அ) பாடத்திட்டம் எனும் பாட நூல்கள் நன்கு காட்டுகின்றன.

'இந்தப் பாடநூல்களிலுள்ள குறைகளையும் பிழைகளையும் சிந்தாமணி வீரகேசரி சுதந்திரன் முதலிய பல ஏடுகள் வெளியிட்டுள்ளன.

புலவர்மணி சோ. இளமுருகனார் போன்ற தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் எனக்குச் சுட்டிக்காட்டித் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுளர். தமிழ் தெரிந்த ஓர் அமைச்சர் பொறுப்பாயிருக்கும் போது தமிழ்ப் பாட நூல்கள் இவ்வாறு வெளியிடப்படுவதின் உள்நோக்கம் என்ன?

இந்தப் பாட நூல்களை உடனே நிறுத்தவும் திருத்தவும் தமிழ்ப்பகுதிகளின் சூழலுக்கும் தமிழரின் கலை பண்பாடு என்பவற்றுக்கும் அமையப் பாடங்களை மாற்றி அமைக்கவும் பாடங்களிலுள்ள சிங்கள பெயர்களைத் தமிழ்ப் பெயர்களாக மாற்றவும் விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிவிக்குக.''

இவ்வாறு காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் கல்வியமைச்சருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

# தபால் திணைக்களத்தில் தமிழ்க் கடிதம் படும்பாடு!

## நிந்தவூர் கி.ச. தலைவரின் அனுபவம்!

தமிழ் அமைச்சர் செல்லையா குமாரசூரியரின் நேரடி நிர்வாகத்திலுள்ள தபால் தந்தித் திணைக்களத்திற்கு தனித்தமிழில் நிந்தவூர் கிராம சபைத்தலைவரால் எழுதப்பட்ட ஒரு கடிதம், உத்தியோக மொழியில்—அல்லது ஆங்கிலத்தில் அக் கடிதத்தின் மொழி பெயர்ப்பொன்றை அனுப்புமாறு குறிப்புடன் எழுதியவருக்கே திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறது.

தமிழ்க் கடிதங்களுக்கு தமிழில் பதில் அளிப்போம் என்று வாய்ச்சவடால் அடிக்கும் குமாரசூரியரின் அமைச்சு ஒரு தமிழ்க் கடிதத்துக்கு, அதுவும் கிராம சபைத்தலைவர் ஒருவரால் எழுதப்பட்ட கடிதத்துக்கு தந்திருக்கின்ற 'மதிப்பு' இது!

இது சம்பந்தமாக தபால் தொடர்பு பொறிஞருக்கு [illegible] கிராம சபைத் தலைவர் பின்வரும் கடிதத்தை எழுதி அதன் பிரதிகளை தபாலமைச்சருக்கும் ஊர்காவற்றுறை பா. உ. வுக்கும், ஜனப் முஸ் தபாவுக்கும் அனுபபியுள்ளார்:-

''எமது சபை தமிழ் மொழி பேசும் மக்களை மட்டுமே பிரதிநிதிப்படுத்துவதாலும், சபையின் சகல உறுப்பினர்களும் தமிழ் மொழி பேசுவோராக இருப்பதாலும், சபையின் முழு வாக்காளர்களும் தமிழ் மொழி பேசுவோராக இருப்பதாலும் சபையின் சகல நிர்வாகங்களும் தனித்தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றி அதன் படியே செயலாற்றி வருகின்றது. இப்படிச்செய்வதற்கு எமக்குச் சகல உரிமைகளுமுண்டு என்று தேசிய அரசபேரவையில், இதற்குப் பொறுப் [illegible] தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்லும் [illegible] அமைச்சர்களும் மறந்து போகாமல், தவறாமல் இக் கருத்தை எடுத்தியம்பத் தவறுவதில்லை. ஆனால் ஒரு தமிழ் அமைச்சரின் பொறுப்பிலுள்ள திணைக்களம் தமிழ் மொழிக் கடிதத்தை திருப்பி அனுப்பி, உத்தியோக மொழியில் அல்லது அந்நிய மொழியான ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு அனுப்பு என்று கேட்டுள்ளது எனக்கு மிகவும் வியப்பாகவே இருக்கின்றது.

எமது சபைக்கு. இது போன்று சுகாதார திணைக்களம், விவசாயத் திணைக்களம், பொது நிர்வாகத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து கிடைக்கப் பெற்ற தனிச் சிங்களக் கடிதம் திருப்பியனுப்பப்பட்டு தமிழ் மொழிபெயர்ப்பு பெற்றுள்ளதை இங்கு குறிப்பிடும் வேளையிலே, எமது சபை தற்போது சகல திணைக்களங்களுடனும் தமிழ் மொழியிலேயே தொடர்பு கொள்கின்றது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகிறேன். எனவே தங்களுக்கு தமிழ் மொழி தவிர்ந்த ஏனைய மொழி எதிலும் என்னால் கடிதம் எழுத முடியாமைக்கு வருந்துகிறேன்.''

### எழுத்தாளர் ஒன்றியம்

சிதறுண்டு கிடக்கும் இளம் படைப்பாளிகளை ஒன்றுபடுத்தி வலுவான கொள்கையடிப்படையில் நெருக்கமாகச் செயல்பட வேண்டும் என்ற தணியாத தாகத்துடன் கொழும்பில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது 'இளம் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்' என்ற அமைப்பு.

பின்வருவோர் இந்த ஒன்றியத்தின் நிர்வாகிகளாகத் தெரியப்பட்டுள்ளனர். அமைப்புச்செயலாளர்: வே. திருநாவுக்கரசு. நிதிச்செயலாளர்: 'சர்வசித்தன்' பொது சனத்தொடர்பாளர்: ந. திருஞானசம்பந்தர். பத்திரிகைத் தொடர்பாளர்கள்: அ. ப. இன்பராஜன், க. யோககாந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதத்தை மேற்கொண்டதன் முக்கிய நோக்கம் என்ன? அமிர் விடுத்த அறிக்கை!

**15—3—73 வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் தமிழர் கூட்டணியினால் நடத்தப்பட்ட உண்ணாவிரதத்துக்கான காரணங்களை விளக்கி தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்திருந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:—**

இலங்கை வாழ் தமிழினத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக காந்தியடிகள் காட்டிய அஹிம்சை வழியில் கடுமையான ஆட்சேபத்தை தெரிவிப்பது எமது உண்மையான உண்ணாவிரதத்தின் நோக்கமாகும்.

இந்நாட்டில் அறத்திற்கும் நீதிக்கும் விரோதமான நடவடிக்கைகள் குறிப்பாக மூன்றை மனித இனத்தின் மனச் சாட்சிக்கு சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

(1) இலங்கை அந்நியர் ஆதிக்கத்தில் அடிமைப்பட முன்னர் சுயாதீனத்துடன் தனி ஆட்சி செலுத்திய தமிழ் மக்கள் புதிய அரசியல் அமைப்பில் மொழியுரிமை, மத உரிமை, குடியுரிமை அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமை இனமாக ஆக்கப்பட்டிருக்கிறது. நீதி கோரி விடுக்கப்பட்ட ஏகோபித்த கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

(2) தமிழ்க் குழந்தைகளின் போதனு மொழியை சிங்களமாக மாற்றும் நடவடிக்கை புத்தூர், அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழினத்தின் தனித்துவத்தை அழித்து சிங்களம் பேசுவோராக மாற்றும் திட்டத்தில் முன்னேடியே இப்போதனு மொழித் திணிப்பு.

பல்கலைக் கழகப் பிரவேசத்தில் பொறியியல், மருத்துவ விஞ்ஞானத் துறைகளில் கடந்த மூன்ருண்டுகளாக தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் ஒரே நோக்கத்தோடு தகுதியின் பேரில் உயர் கல்வி பீடங்களில் சேரும் சம சந்தர்ப்பம் என்ற மனித அடிப்படை உரிமைக்கு மாருக பாரபட்ச நடவடிக்கை கையாளப்பட்டு வருகின்றது. தகுதியிருந்தும் தமிழர் என்ற காரணத்தால் நிராகரிக்கப்பட்ட மாணவர்களுக்கும் சமுதாயத்துக்கும் பாரதூரமான விளைவுகளை இச்செயல் ஏற்படுத்துகின்றது.

3. இவ் அநீதிகளை எதிர்த்து கிளர்ச்சி செய்த மாணவர்களும், இளைஞர்களும் பல மாதங்களாக நீதிமன்ற விசாரணையின்றி சிறைப்படுத்தப்பட்டு மோசமான இம்சைக்கு ஆளாவதும், இளைஞர்கள் சமுதாயத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இவற்றை யொட்டி சிங்கள இனத்தின் மனச்சான்றைத் தூண்டுவது மாத்திரமன்றி தமிழினத்தைச் சுத்திகரிப்பது இவ்வுண்ணாவிரதத்தின் நோக்கமாகும்.

எந்த இனத்தினதும் வாழ்வும் உரிமையும், அவர்களின் ஆத்மீக பலத்திலேயே தங்கியிருக்கின்றது. சத்தியம், அஹிம்சை ஆகியவற்றை கடைப்பிடிக்கமக்கள் உண்ணாவிரதமிருப்பது சரியான வழி.

## இளைஞர் பேரவை நன்றி

பகிஷ்கரிப்பில் ஒத்துழைத்த மாணவ சமுதாயத்துக்கும் பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவித்து தமிழ் இளைஞர் பேரவை சார்பில் கீழ்க்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டது.

'பாடசாலைப் பகிஷ்கார இயக்கத்தை நாங்கள் நடத்தியது எதிர்கால எம் சந்ததியின் நல்வாழ்வுக்காகவேயன்றி அவர்களது கல்வியில் குறுக்கிடு செய்வதற்கல்ல என்பதைத் தெரிவுபடுத்த விரும்புகிறோம்.

நான்கு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இளைஞர் பேரவை நடத்திய பாடசாலைப் பகிஷ்கரிப்புக்கு ஒத்துழைப்புத் தருமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்று ஒத்துழைத்த மாணவ மாணவிகளுக்கும், எம் அடிப்படைக் காரணங்கள் நீதியானவை, சரியானவை என ஏற்றுக்கொண்டு தம் சிறுர்களைப் பாடசாலைக்கு அனுப்பாது ஒத்துழைத்த பெற்றேருக்கும், தமிழ் இனம் இந்நாட்டின் சுபீட்சமான சுதந்திரமானசுயாதீனமான ஒரு இனமாக வாழ வேண்டும் என்ற உயரிய எண்ணத்தை மனதிற்கொண்டு தம் உயிரையும் தரச்சித்தமாய் அறவழிப்போராட்டங்களில் பங்கு கொண்டு உரிமைக் குரல் கொடுக்கும் தமிழர் கூட்டணியினருக்கும் எம் பகிஷ்கரிப்புக்கு பல வழிகளிலும் உதவிய ஏனையோருக்கும் தமிழ்த்தாயின் பேரால் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

'நாம் அறவழியில்தான் செயல்படுகிறோம் என விடுத்த அறை கூவல் உண்மைதான் என உணர்த்தும் வகையில் எவ்வித வன்செயல்களும் நடக்கவில்லையென்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.'

## உண்ணாவிரதம் பழரச பானத்துடன் முடிவு!

தமிழ் இனத்தின் உரிமைகளைப் பறித்ததையும், உரிமைக்குப் போரடும் தமிழ் இளைஞர்களை சிறைப்படுத்தி கொடுமைப்படுத்துவதையும் கண்டித்து 13-3-73 காலை 7 மணிக்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்தின் முன்னல் ஆரம்பமான இந்த உண்ணு விரதம் மாலை 5 மணிக்கு திருமதிமங்கையர்க்கரசியின் தேசிய கீதத்துடன் நிறைவெய்தியது. பழரச பானம் அருந்தி உண்ணுவிரதத்தை தலைவர்கள் முடித்துக்கொண்டனர்.

அன்னையில் ராஜபக்ஸவினால் திறந்துவைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கடல் தொழிற் பயிற்சிப் பாடசாலை மாணவர்களும், கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் பகிஷ்கரிப்பு இயக்கத்தில் முழுமையாக ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் உண்ணுவிரதம் இருந்த தலைவர்களை வந்து பார்த்து வாழ்த்திச் சென்றதையும் அன்று காணக்கூடியதாக இருந்தது.

## புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

பதினைந்தாந்திகதி நடைபெற்ற பாடசாலைப் பகிஷ்கரிப்பு போராட்டத்தின் போது தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் வீரப் புதல்வன் காண்டீபனும் கைதுசெய்யப்பட்டதுகுறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலையைப் பகிஷ்கரிக்கும்படி கோரும் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தபோதே காண்டீபனை பொலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்டு சில மணி நேரங்களின் பின் காண்டீபனை பொலிசார் விடுதலை செய்தனர்.

கடந்த மே 22 குடியரசு எதிர்ப்பு ஹர்த்தாலின் போதும், செல்வன் காண்டீபன் பொலிசாரால் தாக்கப்பட்டதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

# வாசகர்களுக்கு இலக்கியதாகம்- தினகரனுக்கு விதண்டாவாதம்!

கொழும்பு-13 இலிருந்து 'வேந்தன்' என்பவர் 'இலக்கிய உலகுக்கு' பின்வருமாறு எழுதுகிறர்:—

'இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் தமிழ்ச் சஞ்சிகைகளுக்கு ஏன் கொள்ளை லாப விலைகள்?" என்னும்தலைப்பிலே 11-3-73 "தினகரன்" வாரமஞ்சரி ஒரு முற்பக்கச் செய்தியைப் பிரசுரித்திருந்தது. அதிலே இந்தியச் சஞ்சிகைகள் இங்கு கொள்ளை இலாபத்தில் விற்கப்படுகின்றன என்பது விலை ஒப்பீட்டுடன் காட்டப்பட்டிருந்தது. அந்த விபரங்கள் உண்மையானவை; ஆனல், இந்தச் செய்தியுடன் சம்பந்தப்பட்டதாக தினகரன், 'ஐயோ, முறையோ, என்று ஓலமிட்டு எழுதியிருந்த 'எங்கள் கருத்து' மிகவும் வேடிக்கையாக இருந்தது; தமிழ் வாசகரை ஏமாளிகள் என மறைமுகமாக நையாண்டி செய்வது போலவும் இருந்தது.

''இலங்கை மக்கள் இலக்கிய தாகம் கொண்டவர்கள் அறிவுப்பசி பிடித்தவர்கள்; (கொண்டவர்கள் என்று இருத்தல் வேண்டும்) இரசனை உணர்ச்சி மிக்கவர்கள்; அழகினை இரசிப்பவர்கள்'' என்று அந்தத் தலையங்கம் வாசகரின் முதுகை முதலில் தடவிக் கொடுக்கிறது. அப்புறம் ''இயல்பாகவே அமைந்துள்ள இவ்வெழில் அம்சங்களையும் இயல்புகளையும் பயன்படுத்தி ஒருசிலர் இவர்களை ஏமாற்றிப் பிழைக்க அனுமதிப்பதா? ஏதும் அறியாத இம்மக்களைச் சுரண்டிப் பிழிய நாம் பார்த்துக் கொண்டு வாளா விருப்பதா?'' என்று சினிமாப் பாணியில் வீர முழக்கம் செய்கிறது.

இலக்கிய தாகத்தைத் தீர்க்க முடியாது அலைகிற வாசகர்களாகிய நாம், நியாய விலையில் இந்திய சஞ்சிகைகளைப் பெறுவதற்கு ஏதோ மார்க்கம் தெரியப் போகிறது என்னும் ஆவலுடன் இத்தலையங்கத்தை மேலே படித்தால் வெறும் ஏமாற்றம் தான் மிஞ்சுகிறது.

தமிழ் சஞ்சிகைகளின் இறக்குமதித் தடையாலும், கட்டுப்பாட்டாலும் தமிழ் வாசகர்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதனை வெளிப்படையாகச் சொல்ல முடியாமல் அந்தப் பத்திரிகை முதலைக் கண்ணீர் கொட்டியிருக்கிறது.

ஒரு பொருளின் கையிருப்புக் குறைந்து, அதனை உபயோகிப்போர் தொகை அதிகரித்தால், அந்தப் பொருளின் விலை கட்டுமீறிப் போகும் என்பது இக்காலத்தில் சாதாரண மனிதனுக்கும் தெரிந்த விடயம். தமிழ்ச் சஞ்சிகைகளின் விலை அதிகரிப்புக்கும் இதுதான் ஒரே காரணம். இந்தக் காரணத்தை ஒருபுறம் மூடி மறைத்து விட்டுத் தினகரன் ஏதேதோ மாய்மாலம் கொட்டுகிறது. இதற்குக் காரணம் யார்? யார்? என்று ஓலமிடுகிறது!

''அரசாங்கம் தமிழ்ச் சஞ்சிகை இறக்குமதியைக் குறைத்தது; அதனல் விலை உயர்ந்தது'' இதை வெளிப்படையாகச் சொல்ல வக்கு இல்லை என்றல், தலையங்கம் எழுதி ஏன் வீர முழக்கம் செய்ய வேண்டும்?

'தினகரன்' கூறுவதுபோல தமிழ் வாசகர் இலக்கிய இரசனை உடையவர்கள்தான். முப்பது நாற்பது வருடங்களாகக் கலைமகள், [illegible] விகடன் முதலிய பத்திரிகைகளை வாசித்துச் சுவைத்தவர்கள் இப்பொழுதும்—என்ன விலை கொடுத்துப்-அவற்றை வாங்கிப் படிக்க முயல்வதில் என்ன தவறு?

பொதுவாக எந்த வியாபாரியிடமுமே சமூக நீதியை எதிர்பார்க்க முடியாது. சஞ்சிகை வியாபாரிகள் இதற்கு விதிவிலக்கல்லவே! அவர்களும் மனிதர்கள் தான். தேவர்கள் அல்ல.

தமிழ்ச் சஞ்சிகைகளுக்கு இறக்குமதித் தடையும் கட்டுப்பாடும் விதிக்க முற்பட்ட சந்தர்ப்பத்திலே, குழந்தைப் பிள்ளைக்குப் பராக்குக் காட்டுவதுபோல, வாசகர்களுக்கு எத்தனையோ 'இனிப்பான' திட்டங்களை எடுத்துக் கூறினர்கள். அவற்றை




யெல்லாம் 'ஓகோ! ஓகோ!' என்று இந்தப் பத்திரிகை தான் தட புடலாகக் கொட்டி முழக்கியது.

அரசாங்கமே தமிழ்ச் சஞ்சிகைகளை இறக்குமதி செயயும் என்று ஒரு பலூன்! தனிப்பட்ட வாசகர்கள் நேரடியாகச் சந்தா செலுத்தி சஞ்சிகைகளைப் பெற வசதி செய்யப்படும் என்று இன்னொரு பலூன்! இப்படி ஊதி ஊதி விட்ட அந்த 'வர்ண பலூன்கள்' எல்லாம் என்ன ஆயின? அவை யெல்லாம் [illegible] தலையங்கத்தில் எடுத்துப் பேசியிருக்கலாமே!

நாட்டுப் பொருள் நிலை கருதி, வெளிநாட்டு இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல் அவசியமாகலாம். அப்படியானல், கிடைக்கும் பொருளுக்கும் சீரான விநியோக வசதி செய்தல் வேண்டும். அது இல்லாதபடியால்தான் தமிழ்ச்சஞ்சிகைகளுக்கு இவ்வளவு விலையேற்றம்.

தமிழ்ச் சஞ்சிகைகளுக்குத் தடை—கட்டுப்பாடு என்பன விதிப்பதற்கு 'முன்னின்று உழைத்த' அந்த முற்போக்குக் கும்பல் இந்த விலையேற்றத்துக்கு என்ன சொல்கிறது என்பதையும் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா?

தமிழினம் எப்பொழுதும் இப்படியான மாய்மால ஓலங்களால் ஏமாறும்—ஏமாற வேண்டும் என்று ஒரு கூட்டம் எப்பொழுதுமே எதிர்பார்க்கிறது. இதை நினைத்து அழுவதா, சிரிப்பதா?

ஃ

## புதிய மாத இதழ்

புத்தாண்டுமுதல் 'மாணிக்கம்' என்ற கலை, இலக்கிய இதழ் ஒன்று வெளி வரப் போகிறது. சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், சினிமாப்பகுதி, துணுக்குகள், விஞ்ஞானப்பகுதி, மாதர் பகுதி போன்ற பல பகுதிகளை உள்ளடக்கி ஈழத்துப் பத்திரிகைகளுள் தனிச் சிறப்புப் பெற்ற ஒன்ருக உள்ளது. இவ்விதழின் ஆசிரியராக திருமதி—சரோஜினி கைலாசபிள்ளை பி. எஸ். சி. கடமையாற்றுவார் என்று தெரிகிறது.

## சுழிபுரம் கிராம சபை புதிய உபதலைவர்

சுழிபுரம் தமிழரசு வாலிப முன்னணித் தலைவரும் சுழிபுரம் தமிழர் கூட்டணிப் பிரமுகர்களில் ஒருவருமான திரு. மா. பொன்னுச்சாமி, சுழிபுரம் கிராம சபையின் உபதலைவராகஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வயதில் இளைஞரான இவர் சுழிபுரம் கிராமத்தின் தொண்டனுவார். சுழிபுரம் கிராம சபையின் பத்தாம் வட்டார உறுப்பினரான இவர் தமது வட்டாரத்திலுள்ள பாதைகளை நன்கு செப்பனிட்டு மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

## நாவலர் நாடக மன்றம்

நெடுங்கேணி நாவலர் நாடக மன்றத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: மு. சின்னத்தம்பி உப தலைவர்: நா. காராளசிங்கம், செயலாளர்: பொ. பத்மநாதன், உப செயலாளர்: த. ம. பீற்றர் பொன்கலன், பொருளாளர்: அ. இரத்தினம், உப பொருளாளர்: கு. சிவலிங்கம்.

பதினெரு நிர்வாக சபை உறுப்பினர்களும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விடுதலை கிளர்ச்சித் தீயை வளர்த்திட பல வழிகளை கையாளுவோம்!'

## தமிழர் கூட்டணி செயலாளர் அமிர்தலிங்கம் முழக்கம்!

"இப்பொழுது அமைதியான அறப் போராட்டங்களின்மூலம் ஆட்சியாளரின் மனச்சாட்சிக்கு சவால் விட முன் வந்திருக்கிறோம். விடுதலைக் கிளர்ச்சித் தீயை வளர்க்க பலவித வழிவகைகளைக் கையாளுவோம். அஹிம்சை முறையில் வலிமையை நிலைநாட்டுவோம். எம்மை நாமே ஆளும் இனமாக மீண்டும் ஆக்கிக் கொள்ளுவோம்."

—இவ்வாறு யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அ. அமிர்தலிங்கம் முழக்கமிட்டார்.

தளபதி தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

கடந்த 5 மாத காலமாகியும் காங்கேசன் துறை இடைத்தேர்தலை நடாத்தத் திராணியற்றிருக்கின்றது இந்த அரசு. ஏதோ போலிக் காரணங்களைக் கூறுகின்றது. ஆனால் தென்னிலங்கையில படுமோசமான பயங்கரவாத சம்பவங்கள் குடிகொண்டிருந்த நான்கு தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்தப்பட்டிருக்கின்றது.

காங்கேசன்துறை இடைத்தேர்தலுக்கு திரு. வி. பொன்னம்பலம் அபேட்சகராக நிறுத்தப்படவிருக்கின்றார். எனவே அவரை ரஷ்யாவுக்கு அனுப்பி எடுத்திருக்கின்றார்கள். அங்கு 'சேவிஸ்' முடிந்து வந்து இங்கு இப்போது கிறீஸ் பூசப்படுகின்றது. எனவேதான் இங்கு 'அடிக்கடி மந்திரிகள் வந்து போகின்றார்கள்.

தமிழ்ப்பகுதிகளுக்கு வரும் அமைச்சர்களுக்கு நாம் கறுப்புக்கொடி காட்டத் தயங்கமாட்டோம்.

### படைபட்டாளங்களுடன் பவனி

அமைச்சர்கள் இங்கு வருகின்றார்கள், கற்பனையுடன் தேனொழுகப் பேசுகின்றார்கள். இருந்தும் யுத்தத்திற்கு அணி வகுத்துச் செல்லுவது போல படை, பட்டாளங்களுடன்தான் வெளியே செல்கின்றார்கள். இத்தகைய பவனி ஒன்றை அண்மையில் நான் பரந்தனில் கண்டேன்.

தமிழ் இனத்திற்கு எல்லா உரிமையும் கிடைத்துவிட்டது என்று தியாகராசா சங்கானையில் பேசிய அதே மேடையில் தமிழர்களுக்கு முழு உரிமையும் கிடைக்கவில்லை என நிதியமைச்சரே சொல்லியிருக்கின்றார். ஆனால் தியாகராசா எம். பி.யோ முன்பு இருந்த உரிமைகளில் எது இப்போது இல்லையென்று கேட்கிறார்.

### அன்றும் இன்றும்

இலங்கை சுதந்தரமடைந்தபோது, சட்டமூலம், தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து இருந்தது. இன்று சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாகிவிட்டது. சுதந்திரமடைந்தபோது சகல மதங்களும் சரிநிகராக கருதப்பட்டது இன்று பௌத்த மதத்திற்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது. சுதந்திரம் பெற்றபோது சிறுபான்மையினரின், உரிமைகளைப் பாதுகாக்க அரசியல் சட்டத்தில் 29-ம் ஷரத்து இருந்தது. இன்று அரசியல் சாசனத்தில் 29ம் ஷரத்துக்கு இடமளிக்கப் படவில்லை. நாம் சுதந்திரம் பெற்றபோது இந்தியத்தமிழர்களுக்கு பிரஜா உரிமை வாக்குரிமையிருந்தது. அவர்கள் பிரதிநிதிகள் ஆட்சி மன்றத்திலிருந்தனர். இன்று அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. இன்று நாம் எத்தனையோ உரிமைகளை இழந்துவிட்டோம் இது கூட சிலருக்குப் புரியவில்லை.

### அர்த்தம் இல்லை!

நமது பிரச்சினைகளை ஆட்சியாளருடன் பேசித்தீர்த்துக் கொள்ளலாம் என இங்கு வரும் அமைச்சர்கள் எல்லாம் சொல்கிறார்கள், ஆறு அம்சக் கோரிக்கைகளைபிரதமருக்கு அனுப்பி அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் வருவோமென்றோம், பிரதமர் மௌனமே சாதித்தார். இக்கோரிக்கைகள் ஏற்காத பட்சத்தில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு வழி வகுப்போமென்று கூடச் சொன்னோம். அந்த நிலையில் கூட பிரதமர் பேசித் தீர்க்க விரும்பவில்லை. எனவே பேசித் தீர்ப்போம் என இங்கு வரும் மந்திரிகள் சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கின்றது.

தமிழர் கூட்டணியின் ஆறு அம்சக் கோரிக்கையை அனுப்புவதற்கு முன்புகூட, அரசியல நிர்ணய சபை இயங்கிய காலத்தில் எங்கள் தலைவர்கள் அமைச்சர்களைச் சந்தித்து தமிழினத்தின் பிரச்சினைகளை முன்வைத்தார்கள். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது.

சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் சிலர்கூட ஓரளவு எங்கள் கோரிக்கைகளை அனுதாபத்துடன் கேட்டார்கள். ஆனால் சமசமாச அமைச்சர்களே பிடிவாதமாக ஏற்க மறுத்தார்கள். நீதிமன்றங்களில் தமிழுக்குரிய உரிமையையாவது புதிய அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்யவேண்டுமென்று நாங்கள் டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வாவைக்கேட்டபோது—அவர் கூறிய மறுமொழி 'அதுபற்றி நாங்கள் யோசிப்போம்' என்பது தான். ஆனால் எதுவும் நடக்கவில்லை. தமிழர்களின் கோரிக்கைகள் எதுவும் இடம் பெறாது அரசியல் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இப்போது அரசாங்கம் நீதிமன்ற மொழியாக தமிழையும் பயன்படுத்த ஒரு சாதாரண சட்டத்தைக் கொண்டுவரப்போவதாக கூறுகிறது. இது எங்கள் கோரிக்கைக்கு ஒருபோதும் ஈடாக முடியாது. நாங்கள் கேட்பது தமிழுக்கு வழங்கும் இந்த உரிமையை அரசியல் சட்டத்தில் ஒரு அம்சமாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்பதுதான்.

### போராட்டம் ஓயாது!

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களின் நிர்வாக மொழியாகவும் பதிவுமொழியாகவும் தமிழைப் பயன்படுத்துவது தான் அரசாங்கத்தின் அந்தரங்கத்தியான விருப்பம் என்றால்—இதை உறுதிப்படுத்தி, அரசியல் சட்டத்தில் ஒரு விதிமை[illegible] ஏன் மறுத்துவிட்ட[illegible] கேட்கிறேன்! அரசாங்கக் கட்சியிலுள்ளவர்கள் யாராவது—அல்லது தமிழர் பிரச்சினைகளை அரசு தீர்த்துவிட்டது என்று கூறுபவர்களாவது—இக்கேள்விக்கு திருப்தியான பதிலைத் தரமுடியுமா?



1958-ம் ஆண்டு நாங்கள் தடுப்புக்காவலில் இருந்த சமயம், அவசரஅவசரமாக காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா தமிழ் மொழிச்சட்டத்தை கொண்டுவந்தார். அச்சட்டம் இன்று அமுலில் இல்லை. இந்த நிலைமைதான் நீதிமன்ற தமிழ் உபயோகச் சட்டத்திற்கும் ஏற்படும். இதனால்தான் தமிழ் உரிமை பற்றிய விஷயம், அரசியல் சாசனத்தில் இடம்பெற வேண்டும் என்கிறோம்.

1966-ம் ஆண்டு தமிழ் மொழிச் சட்டத்திற்கு சில விதிமுறைகளைக் கொண்டு வந்தோம். அதனை ஐக்கிய முன்னணியினர் எதிர்த்து ஊர்வலம் நடத்தினார்கள். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் அந்த விதிமுறைகள் செல்லுபடியாகாதென அமைச்சர்களே சொல்லிவிட்டனர்.

வடக்குகிழக்கு நீதிமன்றங்களில் தமிழுக்கு உரிமையளிப்பதாகக் கூறப்படும் புதிய சட்டத்தில் அமைச்சரவையின் அனுமதியோடு நீதிமந்திரி விரும்பினால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் எந்த நீதிமன்றத்திலும் தமிழையும் பதிவுமொழியாக்கலாம் எனக் கூறப்பட்டிருக்கிறது. ஓர் அமைச்சரின் விருப்பு வெறுப்பில் தான் தமிழனின் தன்மானம் தங்கியிருக்கிறது. இது எல்லாம் வெறும் கண் துடைப்பு ஆகும்.

நமது உரிமைகள் யாவும், அரசியல் சட்டத்தில் இடம் பெறும்வரை நமது போராட்டம் ஓயாது.

## விடுதலைப் போரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் போராடுகிறார்கள்—" என்றும் அவர் மேலும் சொன்னார்.

கிழக்குக்கு விஜயம் செய்யும் தமிழர் கூட்டணித் தலைவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டப் போவதாக கூறிய இராசன் செல்வநாயகத்துக்கு, 'முடிந்தால் செய்யும் பார்க்கலாம்' என்றும்சவால் விடுத்தார் திரு. இராசமாணிக்கம்.

## உணர்ச்சிக்கவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டித்தும் நடைபெற்ற இக்கவியரங்கத்தில் கவிஞர்கள் முரசொலி—மணிமொழி. இறையரசன், கோவேந்தன், பொன்னடியான், காவிரிநாடன், குருவிக்கரம்பை சண்முகம், ஆகியோர் கவிபாடினர்.

இறுதியில் அகில இந்திய இலங்கைத் தமிழர்கள் சங்கத் தலைவரும் முன்னாள் இ.தி.மு.க. பொதுச்செயலாளருமான திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி கவியரங்கத்தில் பங்கேற்ற கவிஞர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

—மேற்கண்ட செய்தியை சென்னையிலிருந்து வெளிவரும் தி. மு. க. சார்பு நாளேடான 'முரசொலி' வெளியிட்டுள்ளது.

கவிஞர் காசிஆனந்தன், தமிழ் நாட்டில் பல வருடங்கள் வாழ்ந்தவரென்பதும், புரட்சிக் கவிஞர், பாரதிதாசன், கண்ணதாசன் போன்ற தமிழ் நாட்டுக் கவிஞர்களுடனும், தமிழக முதல்வர் மு. கருணாநிதி, ஆதித்தனார், அமரர் அண்ணா போன்ற தலைவர்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றவரென்பதை [illegible] அறிவார்கள்.

## அரசியல் மடல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கடமையை நிறைவேற்றிட இயலாது என்றெண்ணித் தமது பயணத்தை நிறுத்திக் கொள்வதும் உண்டு.

'பாதை எங்கும் இருபுறமும் நிழல்தரு தருக்களும், கனியுதிர் மரங்களும், ஆங்காங்கு சிற்றூறும் இருந்திடும் என்றெண்ணிப் பயணத்தைத் துவக்கிவிட்டு, இடையே இன்னல் மிகுந்திருப்பதனைக் கண்டு, கலங்கித்தவித்துக் கை பிசைந்து கொள்வாரும் கண் கசக்கிக் கொள்வாரும் உண்டு.

'எத்தனையோ பயணங்கள் இதுபோலப் பாதியளவோடு நிறுத்தப்பட்டுப் போயுள்ளன. எத்தனையோ பேர் பயணத்தில் தொடர்ந்து ஈடுபட முடியாது என்று கூறிவிட்டு ஒதுங்கிக் கொண்டதுமுண்டு!

எப்படியும் பயணத்தில் வெற்றிபெற்றாக வேண்டும் என்ற ஆர்வமும் உறுதியும் உள்ளத்துக்கு நிச்சயமாக வலுவளிக்கும். ஆனால் அதைவிட அழுத்தமான வலிவு அளிப்பது நாம் நமது கடமையைச் செய்கின்றோம் என்ற உணர்வுதான்.

'பலன் கிடைத்தாக வேண்டும்—அதுவும் விரைவில்—என்ற பதைப்பு மிகுந்திடுமானால்—பயணத்திலே ஒவ்வோர் அங்குலமும் ஒரு மைல் போலத்தோன்றும்; ஒவ்வொரு விநாடியும் ஒரு நாள் பொழுது போலத் தோன்றும்! உள்ளம் உரைத்தபடி நடக்கின்றோம் என்ற உணர்வு இருப்பின், இன்னலைப் பொருட்படுத்தக் கூடாது என்ற மனத் திட்டத்தை ஏற்படுத்துவதுமட்டுமல்ல பலன் பற்றிய கணக்குப் பார்க்கும் 'அர்ப்பையே' அது போக்கிவிடும்; பயணம் செய்வது நம் கடமை என்ற உணர்வு புதியதொரு வலிவினை, மன நிறைவினைத் தந்திடும்'

(காஞ்சி 15-8-1965)

இவ்வாறு கூறுகிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள். எனவே அண்ணன் உரைத்த உபதேசத்தை மனதில் கொண்டு, கடமையைத் தொடர்ந்து செய்வோம்—பலனை எதிர்பாராமல்! பயணத்தை தொடருவோம் இன விடுதலையை இலக்காகக் கொண்டு:

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

மலிவான சலவைக்கு
மில்க்வைற் சலவைப்பவுடர்
துரித சலவைக்கு
மில்க்வைற் சலவைப் பவுடர்
அநேக உடைகளை நொடிக்குள் சலவை செய்ய
மில்க்வைற் சலவைப் பவுடரைப் பாவியுங்கள்.
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டப்பன் தியாகராசாவின் துட்டத்தனம்!
# ஆளுங்கட்சிக்கு பந்தம்பிடிக்கும் மட்டித்தனம்!

## அடிமைப் பிறவிகளை ஒதுக்கித்தள்ளி இனவிடுதலைக்குப் போராடுவோம்!

'தமிழர்களின் உரிமைகள் கொடுக்கப்படத்தான் வேண்டும். இதை நாம் மறுக்கவில்லை.'—

என்று அண்மையில் வடமாகாணத்துக்கு விஜயம் செய்திருந்த இன்றைய அரசாங்கத்தின் நிதி மந்திரி டாக்டர் என்.எம். பெரேரா அவர்கள் சங்கானையில் பேசிய ஒரு கூட்டத்தில் கூறியிருந்தார்.

ஆனால் அதே கூட்டத்தில் பேசிய வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திருவாளர் தியாகராசா அவர்கள். 'தமிழர்களின் உரிமைகள் எதுவும் பறிபோகவில்லை. ஏனைய நாடுகளில் உள்ளது போலவே அரசியல் சட்டத்தின் மூலம் இங்குள்ள சிறுபான்மையினராகிய எமக்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.' என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

எப்படிப்பட்ட அடிமை மனப்பான்மை பாருங்களேன்!

'நான் உனக்குக்கொடுத்த உணவு போதாது'—பே'தாதா? என்று விசாரித்தோ அல்லது போதாதோ?என்று வெருட்டும் வகையில் கேட்டோ அல்ல—'போதாது என்று அழுத்தம் திருத்தமாக எஜமானனே சொல்லிய பின்பும் கூட 'இல்லை, பிரபு; தாங்கள் எனக்குப் போதிய அளவு உணவு கொடுத்துவிட்டீர்கள்' என்று கூறிய அடிமையை இந்த உலகம் இப்பொழுது தான் கண்டிருக்கின்றது! அதுவும் இந்த ஈழத் திருநாட்டிலே வட்டுக்கோட்டைப் பிரதிநிதி என்ற ரூபத்திலே!

தன்மானம் நிறைந்த தமிழன் தளபதி அமிர்தலிங்கம் பிரதிநிதித்துவம் செய்த வட்டுக்கோட்டை என்ன துர்ப்பாக்கியம் செய்ததோ இப்படிப்பட்ட 'பனி' ஒருவரால் இந்நாட்டுத் தேசியப் பேரவையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்கு! திருவாளர் தியாகராசா அவர்களுக்கு 'பனி' என்று பட்டம் சூட்டினர்களே அவர்களுடைய வாயில் ஒரு பிடி சீனி—வெள்ளைச் சீனி; கொள்ளை விலை கொடுத்தாவது வாங்கி—போட வேண்டும்! தியாகராசா வெறும் பனி மட்டுமல்ல—தமிழினத்தி... கொடிய விஷ நஞ்சு என்பதையும் தமிழினம் உணர்ந்து கொண்டு வருகிறது.

கடந்த 15ந் திகதி 'ரைம்ஸ் ஓவ் சிலோன்' என்ற ஆங்கிலத் தினசரி 'கூட்டணி அர

**அருள்**

சும் தமிழர் கூட்டணியும்' என்ற தலைப்பில் ஒரு அருமையான ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது.

அதில் திருவாளர் தியாகராசா அவர்கள் சங்கானையில் திருவாய் மலர்ந்தருளியதைக் குறிப்பிட்டுப் பின் வருமாறு எழுதியுள்ளது.

'இன்றைய அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்துவிட்டது என்று அதே கூட்டத்தில் சிறுபிள்ளைத்தனமாகப் பேசிய அந்த வடமாகாண உறுப்பினர் ஒருவரை நாம் ஒதுக்கித்தள்ளி விடுவோம்.'

ஆம்: அந்த அடிமை மோகம் கொண்ட 'பனி'யர் திருவாளர் தியாகராசா ஒதுக்கித்தள்ளப்பட வேண்டியவர் தான்!

அவர் மட்டுமல்ல; அவரைப் போலப் பேசிக்கொண்டு திரியும் அருளம்பலத்தார், மாட்டீனர், ராஜன்செல்வநாயகர், ஏன், கௌரவ அமைச்சர் செல்லையா குமாரசூரியர். அத்தோடு, தேசியப் பேரவையில் காங்கேசன்துறைப் பிரதிநிதியாக வரவேண்டுமென்று மனப்பால் குடித்துக்கொண்டு இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எல்லாம் செய்துவிட்டது என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு திரியும் தோழர் வி. பொன்னம்பலமும் இவர்களுக்கு 'ஆமாம் சாமி'பாடுகின்றவர்களும் கட்டாயம் ஒதுக்கித்தள்ளப்பட வேண்டியவர்களே.

இன்னும் சில நாட்களில், இவர்கள், இந்த அரசாங்கத்தைப் பார்த்து, 'தமிழர்களுக்கு நீங்கள் எல்லா நன்மைகளும் செய்து விட்டீர்கள்; சிங்கள மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை; அவர்களுக்குத் தான் இனிமேல் எல்லாம் செய்து கொடுக்க வேண்டும்; எங்களுக்கு இனி ஒன்றும் செய்ய வேண்டாம்' என்று சொன்னாலும் சொல்லுவார்கள்! இவர்கள் அப்படிச் சொன்னால் நாம் ஏதும் ஆச்சரியப்படத் தேவையில்லை. அடிமை மனப்பான்மை இவர்களிடம் அந்த அளவுக்கு வளர்ந்திருக்கின்றது! வேரூன்றி விட்டது!!

'தமிழ்ச் சமுதாயத்தினுடைய அமோகமான ஆதரவையும் விசுவாசத்தையும் தமிழர் கூட்டணி முழுவதாகப் பெற்றிருக்கின்றது என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது அவசியம். அதை மறைக்கப்பார்ப்பதோ அன்றித் தமிழர்கூட்டணியை உதாசீனம் செய்துகொண்டு அவர்களுடைய 'தலைகளுக்கு மேலாக'சென்று தமிழ் மக்களைத் தம் வசம் திருப்பப்பார்ப்பதோ பயனற்ற ஒரு வேலை மாத்திரமன்றி நிச்சயம் தோல்விகாணும் முயற்சியுமாகும்.' என்று மேலும் அத்தலையங்கத்தில் சொல்லப்பட்டிருக்கும் அறிவுரையை அரசாங்கம் மாத்திரமல்ல தமிழ் மக்களின் பிரதிநிதிகள், உரிமைக்குரல் தாங்கள் தாம் என்று கூறிக்கொண்டு எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அடிமை மோகம் கொண்ட சில தமிழர்களும் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

## இன முழக்கம் ஆண்டுமலர்

இன முழக்கம் 16வது ஆண்டு மலர் தமிழரசு தந்தை செல்வாவின் 75வது பிறந்த தின மலராக வெளிவரவிருக்கிறது. இம் மலர் வெளியீட்டு விழா திருமலையில் இத்திங்கள் இறுதியில் நடைபெறவிருக்கிறது.

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**296-வது நாள்**

## விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ் மொழிக்கு முதலிடம்!
## தமிழ் மாணவர்களின் சங்கற்பம்!

இவ்வாரத் துவக்கத்தில் புனித யோவான் — யாழ். மத்திய கல்லூரிகளுக்கிடையே நடைபெறவிருக்கும் பெரும் போட்டி, பெரும் போட்டிகள் வரிசையிலே 75 வது பெரும்போட்டியாகும்.

75வது ஆண்டு விழாவைக் காணுகிற பெரும் போட்டியைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளைச் சம்பந்தப்பட்ட கல்லூரி களது நிர்வாகங்கள் மட்டுமன்றி மாணவர்களும் தடபுடலாகச் செய்து வருகிறார்கள்.

சமீபகாலமாக மேற்படி போட்டிகள் யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலேயே நடைபெற்று வருகின்ற பொழுதிலும் பெரும்போட்டிகளுக்கான ஒழுங்குகளை இரு கல்லூரிகளும் மாறி மாறி நிர்வகித்து வருகின்றன. கடந்த ஆண்டிற்கான நிர்வாக ஒழுங்குகள் புனிதயோவான் கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே இவ்வாண்டுக்கான பெரும் போட்டி ஒழுங்குகள் யாழ். மத்திய கல்லூரியால் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்படும்.

1971ம் ஆண்டு நடைபெற்ற பெரும் போட்டியில் ஒலிபெருக்கி மூலமாக நேர்முக வர்ணனைகள் மட்டுமன்றி வழமையாக பெரும்போட்டியின் போது ஒலிபரப்பாகும் ஆங்கில மெல்லிசைக்குப் பதிலாகத் தமிழ் இசை—நாதஸ்வர, புல்லாங்குழல் வாத்திய இசை முதன்முறையாக ஒலிபரப்பானது. அந்தச் சாதித்த பெருமை யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரான திரு. சபாலிங்கம் அவர்களையே சாரும். அவ்வாண்டு பரிசளிப்பு உரைகளும் தமிழில் மாணவர் ... மொழியில் இடம் பெற்றது இப்போட்டிகளில் வரலாற்று முக்கியம்வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.

கடந்த ஆண்டில் பெரும் போட்டி ஒழுங்குகளை நிர்வகித்த புனித யோவான் கல்லூரியினர் மேற்படி வரலாற்றுப் பெருமை வாய்ந்த புதிய திருப்பத்தில் மேற்கொண்டும் சில முன்னேற்றங்களைச் செய்தார்கள். முந்திய ஆண்டில் ஒலிபெருக்கியில் ஆட்டத்தை தமிழில் வர்ணிக்கும்போது ஆங்கிலப் பதங்களை அப்படியே தமிழ் வர்ணனையுடன் சேர்த்துச் சொன்னார்கள். கடந்த ஆண்டிலே நடைபெற்ற போட்டியின் போதோ ஆங்கிலப் பதங்களுக்கான மொழி பெயர்ப்பைத் தூய தமிழில் ஆங்கில மொழிக் கலப்பு இல்லாது தந்தார்கள். அத்தோடு உத்தியோகத்தர் அட்டை, நுழைவுச் சீட்டுக்கள் ஆகியவற்றிலும் தமிழ் மொழி முதல் தடவையாக இடம் பெற்றது ஆங்கிலத்துக்குச் சமதையாக ஆயினும் போட்டி சம்பந்தப்பட்ட சிறப்பு வெளியீட்டில் தமிழ் வழமைபோல் புறக்கணிக்கப்பட்டமை வருத்தத்துக்குரியதே!

இவ்வாண்டு, பெரும் போட்டி நிர்வாகத்தைப் பொறுப்பேற்கும் மத்திய கல்லூரி மேற்படி நல்லெண்ணத்துடன் திருத்திக் கொள்ளுமென இரு கல்லூரிகளினதும் மாணவர்கள் எதிர் நோக்குகின்றனர். அத்துடன் உத்தியோகத்தர் அட்டைகள், நுழைவுச் சீட்டுக்கள், ஒலிபரப்பாகும் மெல்லிசை யாவும் தமிழ்மயமாகுமென நம்புகின்றார்கள்.

மாணவர்களைப் பொறுத்த மட்டில் போட்டியில் தத்தமது மாணவர்களை ஊக்குவிக்கும் சுலோகங்களைத் தூய தமிழில் மட்டுமே கோஷிப்பதென்பதில் தீவிரமாக இருக்கிறார்கள். பொருத்தமான தமிழ்ச் சுலோகங்களை ஏலவே துண்டுப் பிரசுரங்களாக வெளியிட்டிருக்கும் மாணவர் மன்றம் ஏற்கனவே அவற்றை நடைமுறைக்கும் கொண்டு வருவதில் வெற்றியடைந்து வருகிறது.

இப்பொழுது வட பகுதியில் கல்லூரிகளுக்கிடையே நடைபெறும் மட்டைப் பந்தாட்டப் போட்டிகளில் பின் வரும் சுலோகங்களையே மாணவர்கள் கோஷித்துவருகின்றனர்:—

"குத்துக்கட்டைகள் ......... தகரட்டும்"
"சுள்ளிக்கட்டைகள் ......... பறக்கட்டும்"
"நிலையில் வீழ்த்து ......... மூவரை வீழ்த்து"
"போட்டார் போட்டார்"
"போடு போடு ......... இலக்குப் பறக்க"

"நிதானம் நிதானம்"
"வேண்டும் வேண்டும்" ......... "ஓட்டங்கள் வேண்டும்"
"கோடிக்குக் கோடி" ......... "விளாசி அடி"
"ஆறு ஆறு ........." "தப் பக்கம் ஆறு"
"ஏறு ஏறு ........." "கூட்டுத்தொகையே ஏறும்"
"ஒற்றை கலை ........." "உதாசீனம் செய்யாதே"

மாணவர்கள் இப்படித் தூய தமிழில் சுலோகங்கள் சொல்வதெல்லாம் பெரும் போட்டியை முழுக்க முழுக்கத் தமிழ் மயமாக்குவதற்[கு] ... கொள்ளுகின்றார்கள்.

## 'மட்டைப் பந்தாட்டப் பெரும்போட்டி'

(கவிஞர்: வே. ஐயாத்துரை)

மட்டைப்பந் தாட்டப்பெ ரும்போட்டி—எங்கள்
மத்திய கல்லூரி மைதானத்தில்
நெட்டைக்காற் சட்டைமி னிர்போட்டி—என்றும்
நேசக்க ரம்நிரை நீழ்போட்டி

பக்கமி ரண்டே பரந்திருக்கும்—மத்தி
பரியோவான் பள்ளிகள் பேரிருக்கும்
மக்கள்கு ழாம் வந்து சேர்ந்திருக்கும்—காலை
மாலைவ ரைவிளை யாட்டிருக்கும்

பதினொன்று பதினொன்று வீரர்களே — ஒவ்வோர்
பக்கத்தி லும்விளை யாடிடுவார்
விதியொன்றி நடுவர்கள் மேவிநிற்பார்—வீரர்
வித்துவத் தன்மையைக் காட்டிடுவார்

மும்மூன்று கொட்டன்கள் நாட்டிடுவார்—இடை
முற்றத்தி லேயோடி ஆடிடுவார்
செம்பந்தை வீசியே சாடிடுவார்—பல
திக்கிலும் வீரர்சி லர்நிற்பார்

எட்டப்ப றக்குது பந்துபார்ந்தே — அதை
ஏந்திட வீரர் முயன்றிடுவார்
வெட்டைத னில்குறி எல்லையைத் தாண்டிடவே
விழும்பந் தாவெண்கள் மேலாகுமே!

ஓடாது ஓட்டங்கள் பெற்றிடுவார் — சிலர்
ஓரெறி யில்வெளி யேற்றிடுவார்
ஆடாது சென்றிட்ட அன்பருக்கும் — நல்ல
ஆர்வத்தை ஊட்டிடப் புத்திசொல்வார்.

சொட்டுச்சொட் டிச்சிலர் நின்றிடுவார் — நல்ல
துடுப்பெடுத் தேடபவர் ஆடிடுவார்
கட்டுப்பாட் டைடப்பவர் காத்திடுவார் — சிலர்
கந்திப் பிழைகளைக் காட்டிடுவார்

அந்நிய நாட்டின்வி ளையாட்டே — எங்கள்
ஆர்வத்தி னுல்வந்த தின்னாட்டில்
பன்னுஞ்சு லோகங்கள் பைந்தமி ழில்வைத்துப்
பாவித்தல் பண்பாகும் வீரர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் (2)




இயற்கையின் இனிய அழகைக் கிராமங்களில்தான் காணமுடியும். நவீன நாகரீகத்தின் படையெடுப்பினுல் இயற்கையன்னை கருச்சிதைவுண்டு செயற்கை அலங்காரங்களினுேடு நாகரீகப்பெண்ணுக விளங்கும் பட்டினங்களில் இயற்கை இன்பத்தை அனுபவிக்க முடியாது. இதனை நன்கு உணர்ந்த மேல்நாட்டினர் ஈழத்தில் உயர் கல்விப்பீடங்களை அமைத்த வேளையில் இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசங்களைத் தேர்ந்து எடுத்தனரோ என நினைக்கும்படி அமைந்துள்ளது அந்தப் பட்டதாரிகள் கல்லூரி. அதிகாலையிலே துயில் நீங்கி எழுந்த ஹாஸ்டல் மாணவர்கள் மாடியின் பின் விருந்தைகளில் நின்று பச்சைப் பசேல்எனக் காட்சியளிக்கும் வயல்வெளிகளைப் பார்த்துக்கொண்டே ஒருவரை ஒருவர் கேலிசெய்து கும்மாளம் அடித்துக் கொண்டு நின்றனர் ஆனல் சுகுணு மட்டும் தனது அறையில் தனித்திருந்தாள்,

சுகுணுதேவி அதிகம் அழகு என்று சொல்லமுடியாவிட்டாலும், செயற்கை அலங்காரங்களுடன் பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாகவே தோன்றுவாள். நாளுக்கு நாள் புது நாகரீகங்களை முதலில் கல்லூரிக்குக்கொண்டு வரும் பெண்மணி அவள் என்றே சொல்லவேண்டும். யாரோடும் கலகலப்பாகப் பேசுவாள். அது அவளுடைய சுபாவம். எந்த ஆண்களுடனும் எங்கேயும் தனித்துச் செல்வாள். இதன் காரணமாக மாணவிகள் சிலருக்கு அவள்மீது பொருமை, சிலருக்கு அவள்மீது அருவருப்பு. அவளைப் போன்று சந்தர்ப்பம் தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தின் காரணமாக ஏற்பட்ட வெறுப்பினுல் அவளை ஒழுக்கங்கெட்டவள் என்றும் பலர் கூறினூர்கள்.

'உலகம் ஆயிரம் சொல்லட்டுமே. எனக்கு நான் தான் நீதிபதி.' என்ற கொள்கையயுடையவள் சுகுணு. அவள் யாருக்கும் பயப்படாத சுபாவமுடையவள். ஆனல் புதிய பட்டதாரி மாணவனுன வாசுவுடன் பழகமுடியாதிருந்த நிலையை நாடகம் மாற்றியமைத்து விடவே அவள் மனதில் புதிய உற்சாகம் தலைதூக்கியது. நாடகத்துக்குப் பொறுப்பான தமிழ் விரிவுரையாளர் பத்மநாதன், வாசுதேவனைத் தேடித் திரிந்தார். அவன் பஸ்ஸிற்காக நின்றதைப் பார்த்துவிட்டு வந்து அவனைக் கூட்டிச் சென்றது முதல் அவனுடன் பழகும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டுவிட்டாள் சுகுணு.

நாடகத்தில், மறுநாள் ஒத்திகைக்கான பிரதிகளை அவனிடம் கொடுத்தனுப்பினூர் பத்மநாதன். அவனை பஸ் நிலையம்வரை கூட்டிச் சென்றுவிட்ட பின்னரே ஹாஸ்டலுக்குத் திரும்பினுள் சுகுணு.

சுகுணுவைப் பற்றி பலரும் பலவிதமாகக் கதைத்ததை வாசு அறிவான். ஆனல் அவளோடு பழகிய சில நிமிடங்களில் அவளைப் பற்றி முழுதாக அறிந்து கொள்ளமுடியாவிட்டாலும் அவள்ஒரு 'சோஷியல் கேர்ல்' என்று முடிவு செய்துகொண்டான், அவனைப் பற்றியும் அவள் அறிந்துகொள்ள முயன்ருளாயினும், அவனுடைய பேச்சிலிருந்து எந்தவிதமான முடிவுகளையும் அவளால் அனுமானிக்கமுடியாதிருந்தது.

அன்று பஸ்ஸிற்குச் செல்லும்பொழுது இருவருக்குமிடையில் நடந்த உரையாடலை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தாள் சுகுணுதேவி.

'ஏன் மிஸ்டர் வாசு! உங்களுக்கு முன்பும் நாடகங்களில் நடித்து அனுபவம் உண்டா?'

'உண்டு. ஆனல் பெண்களோடு நடித்ததில்லை. அதுதான் பிரச்சினை.'

'நானும் நடித்திருக்கின்றேன். ஆனல் ஆண் வேடம் போட்ட பெண்களோடு தான். 'ஆண்களும் பெண்களுமாக நடிக்கவேண்டும். நீ நடிக்கிருயா சுகுணு?' என்று கேட்டார் திரு. பத்மநாதன். நான் நடிப்பதாயின் வாசு என்னுடன் நடிக்க வேண்டும் என்று நான்தான் அவரிடம் கூறினேன்.'

'இது உங்கள் ஏற்பாடு தானு?'

'ஆமாம்.'

'ஏன் அப்படிக் கூறினீர்கள்?'

'மிஸ்டர் வாசு! நான் பலரோடும் பழகுகின்றேன். ஆனல் எல்லோரையும் நம்ப முடியாதல்லவா? தவிர இது நாடகம் என்ருலும் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி... மிஸ்டர் வாசு! நான் உங்களுடன் பழகவில்லையாயினும் உங்களை நம்புகின்றேன. அதனுல்தான் உங்கள் பெயரைச் சிபார்சு செய்தேன்.' என்ருன்.

'மிஸ் சுகுணு! நாடகத்தில் நாங்கள் நடிக்கத்தானே போகின்ருேம். இதில் என்ன?'

'நடிப்புத்தான் மிஸ்டர். ஆனல் மேடையில் நடித்துவிட்டு வெளியில் வீண் பிதற்றல்கள் பிதற்றுவோருடன் எப்படி சேர்ந்து நடிப்பது? அப்படியெல்லாம் நீங்கள் செய்யமாட்டீர்கள் என்று நான் நம்புகின்றேன்.''

'அப்படியா? நல்லது பஸ் வருகிறது.' என்று கூறி விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

அவள் பலரோடு பழகியிருந்தபோதிலும் அவனுடன் பழகிய நிமிடங்களிலேயே எல்லோரும் அவளைப் பற்றி உயர்வாகக் கதைப்பதின் உண்மையைப் புரிந்துகொண்டாள். பலரது பேச்சுக்கும் நினைப்புக்கும் உரித்தாய் உள்ள ஒருவன் என்னுடையவனுய் விட்டால்? என்ற ஒரு கேள்வி அவள் மனதில் விசுவரூபம் எடுத்து நின்றது. நாடகத்தினைத் தனக்குச் சாதகமாக்கி எப்படியாவது அவனைத் தன்வசப்படுத்தி விட வேண்டும் என்ற திட்டம் அவள் மனதில் உருவாகிக்கொண்டிருந்தது.

மாலை வீட்டுக்கு வந்ததும் ராதாலட்சுமி கொடுத்த புத்தகத்தினுள் இருந்த கடிதத்தை எடுத்துப்படித்தான் வாசு. அவள் காதல் கடிதம் எழுதியிருப்பாள் என்றுதான் முதலில் நினைத்திருந்தான். ஆனல் அவள் எழுதியது காதல் கடிதம் அல்ல அதைவிட முக்கியமான கடிதம். ஒரு முறை படித்த கடிதத்தை மீண்டும் படித்தான்.

மிஸ்டர் வாசு,

இக் கடிதம் எழுதும்பொழுது பைத்தியக்காரத் தனமான செயல் என்று பல தடவை நானே நினைத்தேன். ஆனல் எனக்கு நீங்கள் செய்த உதவிகளுக்குக் கைமாருக எனனுல உதவி செய்ய முடியாவிட்டாலும், தங்கள் பெயருக்கு ஏற்படக் கூடிய களங்கத்தினைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதற்காகவே எழுதுகின்றேன். மிஸ். சுகுணுதேவி உங்களுடன் சேர்ந்து நாடகத்தில் நடிக்க வேண்டும் என்றே உங்களைக் கண்ணி வைத்துப் பிடித்துள்ளாள். அவள் நடத்தைகெட்டவள். அவளோடு என்ன—வேறு எந்தப் பெண்ணுேடும் சேர்ந்து நீங்கள் நடிப்பதை நான் விரும்பவில்லை. உங்கள் விருப்பத்துக்குக் குறுக்கே நான் நிற்கமாட்டேன்.

உங்களுக்கு இவை தெரியாதிருந்தால் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே எழுதியுள்ளேன்.

அன்புடன்,

ராதா.

கடிதத்தைப் படித்து முடித்த பொழுது புரிந்து




கொள்ளமுடியாத பல்வேறு உணர்ச்சிகளே அவன் மனதில் மேலோங்கி நின்றது. ராதா லட்சுமியின் கடிதத்தின் உட்பொருள் என்னவாயிருக்கும்? அவள் குடும்ப நிலைமைபற்றி நன்கு தெரிந்து கொண்ட வாசுதேவன் அவளைப்பற்றி தவருகக் கூட மனதில் நினைத்துப்பார்த்தது கிடையாது. சுகுணுவை நடத்தை கெட்டவள் என்று எழுதிவிருக்கின்ருளே அதை தப்பமுடியுமா? ஒருத்தி பலருடனும் சகசமாக சங்கோசமின்றிப் பழகுகின்ருள் என்பதற்காக அவளை நடத்தை கெட்டவள் என்று எப்படிக் கூறமுடியும்? எல்லாவற்றுக்கும் ஒப்புதல் கொடுத்த பின்பு ராதாலட்சுமியின் வேண்டுகோளை ஏற்று நடிக்காமல் விடமுடியுமா? 'அவளோடு மட்டுமல்லாமல் எந்தப்பெண்ணுடனும் சேர்ந்து நீங்கள் நடிப்பதை நான் விரும்பவில்லை' என்ற வாக்கியத்தில் அவளுடைய மனநிலை தெளிவாகத் தெரிந்தாலும் அவள் எங்கே? நான் எங்கே? மறந்தும் அவளை நான் நினைத்துப் பார்க்கத்தன்னும் முடியுமா?

—முடிவு தெரியாத ஒரு உணர்ச்சிப் போராட்டத்தின் பின்பு தன்னைச் சுதாகரித்துக்கொண்டான் வாசுதேவன்.

அதே வேளையில் ராதாலட்சுமியின் மனதில் பல்வேறு போராட்டங்கள். சுகுணுவுடன் வாசு சென்றதைப் பார்த்துத் தான் மனம் குமுறிய சமயம் கார் வந்து நின்றதும், காரிலிருந்த அக்கா கவிதா 'லட்சுமி வாயேன்' [illegible] சமாளித்துக்கொண்டு காரில் ஏறியதும், பின்பு அக்காவுடன் வீடு வந்து சேர்ந்ததும் அவள் ஞாபகத்துக்கு மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தது.

பழைய ஞாபகங்களுக்குத் தன்னை அடிமைப்படுத்திக் குமுறிக் கொண்டிருந்தாள் ராதாலட்சுமி. தினசரிகாரில் சென்றுவர வசதி இருந்தும் வாசுவுக்காகவே அவள் தனமும் பஸ்ஸில் சென்று வந்தாள். ஆனல் அவளைப்பற்றி பலரும் பலவிதமாகக் கர்வமற்றவள், பணமிருந்தும் எளிமையை விரும்புபவள் என்று கூறிக் கொண்டனர். வாசுவுக்காக அவள் இத்தனை செய்யும் பொழுது வாசு தன் சொல்லைமீறி நடப்பானு? அதுவும் என் கண்முன்னேயே அவளோடு மேடையில் நடிப்பானு? என்றெல்லாம் எண்ணமிட்டவாறே அன்று இரவு பூராக நித்திரையின்றித் தவித்தாள்.

ஒரே சம்பவத்தின் அடிப்படையில் பல்வேறு இடங்களில் பல்வேறுபட்ட மனப்போராட்டங்கள். உலக நியதியில் ஆண்டி முதல் அரசன் வரை, அரசியல்வாதிகளிலிருந்து தெருப் பொறுக்கிகள் வரை இப்படிப்பட்ட போராட்டங்களே நடந்து கொண்டிருக்கின்றன போலும். எண்ணத்தின் இனிமைகளில் விழிகளை மூடிக் கொண்டாளாயினும் உள்ளத்தில் தோன்றிவிட்ட வடுவை அவளால் மறக்க முடியவில்லை.

மாடியின் கைப்பிடிச் சுவரில் சாய்ந்த வண்ணம் நின்றிருந்தாள் ராதாலட்சுமி. அலைபோன்று சுருண்ட கருங்கேசத்தினைக் கூட்டி தேன் கூடு போலக் கொண்டை போட்டிருந்தாள். அழகியகாஷ்மீர் புடவை அவள் உடல் மென்மையை மேலும் மென்மை காட்டி மினுங்கிக் கொண்டிருந்தது. காதளவோடிய நீள் விழிகளில் எதையோ எதிர்பார்த்துத் தவிக்கும் ஏக்கம். வெண்முத்துப் பரல்களென மினுங்கும் பல்வரிசை. தென்னம் பாளை வெடித்துப் பிளந்தது போன்ற ரோஜா இதழ்களிடையேபளிச்சிட்டுமின்ன ஒருக்களித்துச் சாய்ந்து நின்றிருந்தாள். திடீரென அவள் விழிகளை யாரோ மூடவே, ''வாசு''-என்று அவன் மீது சாய்ந்தாள். வானத்தில் பறப்பது போன்ற இனிமையான உணர்வு. கன்னிப் பருவம் என்னும் சுட்டருகுத் தேரல் மாறுபட்ட உணர்வின் தாக்கம் ஏற்பட்டதின் விளைவால் தோன்றிய மயக்கம். தேன் பிலிற்றும் நறுமலரென அவள் கன்னி உள்ளமும் இன்பத் தேன் பிலிற்றியது.

''ராதா! ஏய் ராதா!''

''என்ன 'இம்' என்றும் 'உம்' என்றும். என்னைப் பாரேன் ராதா.'' என்ற வாசுவின் குரல் அவள் இதயத்தில் இன்பகீதம் இசைத்தது.

''வாசு! நீங்கள் என்னுடமை எனக்குரியவர். உங்களை எந்தப் பெண்ணும் தொட்டுப்பேசுவதை என்னுல் தாங்கிக் கொள்ள முடியாது.'' என்று அவன் மார்பில் சாய்ந்தவாறே தன் அழகு விரல்களினுல் அவன் மார்பின் மீது கோலம் போட்டு விளையாடினுள்.


''ராதா பெண் என்ற பிறப்பே ஆசையின் மறு உருவம் என்று சொல்வார்கள். நீயோ பேராசைக் காரியாக இருக்கின்ருயே.''

''என்ன சொன்னீர்கள்? நான் பேராசைக் காரியா?''

''ஆமாம் நீ பேராசைக் காரிதான்..'' என்று அவன் அழுத்தந்திருத்தமாக கூறிய பொழுது, அவளுடைய ஆனந்த மயக்கம் தெளிந்து ஆத்திரம் பீறிட விழித்துத் திரும்பினுள். அங்கு வாசுதேவன் இல்லை. அவனுக்குப் பதில் அவள் தந்தை சோமசுந்தரம் நின்றிருந்தார்.

வளரும்

## மூதூரின் முத்து! முத்தமிழின் சொத்து!!



மூதூர் தந்த முத்தமிழின் சொத்து—தமிழின விடுதலை உணர்வின் சின்னம்—மொழியுரிமைப் போரில் ஈடுபட்டு களத்திலிலே உயிர்நீத்த வீர மறவர்—அமரர் ஏகாம்பரம் அவர்களின் நினைவுநாள் மார்ச்சு 22ம் நாளாகும். அமரர் ஏகாம்பரத்தின் இலட்சியப்பற்றினை வாழ்த்தி, அவரைப் போல தந்தை செல்வாவின் தலைமையில் விடுதலைப்பாதையில் தொடர்ந்துசெல்ல அந்நாளில் தமிழ் ஈழமக்கள் உறுதியெடுத்துக் கொண்டனர்.

4-வதுவாரம்!
செல்லமகால்
இம்பீரியல் (மட்டுநகர்)

4-வது வாரம்!
வின்சர் (யாழ்நகர்)

ஜெமினி கணேசன் ● பத்மினி ● நாகேஷ்
வி.கே.ராமசாமி ● சுந்தரராஜன் ● சௌகார்
ஜானகி ● மனோரமா ● பேபி ராணி நடித்த

குழந்தைக்கு
தாய்
எமனா?
? ? ?



விதியும் விதியும்
மோதினால் மோசம்
அந்த மோசத்தில்
விளைவது?
? ? ? ? ?

விரைவில்
கெயிட்டி
மற்றும் திரைகளில்

ஜெய்சங்கர்
ஆனந்தன்



வாணிஸ்ரீ, நாகேஷ்
—நடித்த
அத்தைமகள்



3 - வது வெற்றி மாதம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், வாணிஸ்ரீ,
—நடித்த—

வசந்தமாளிகை
(ஈஸ்ட்மென் கலர்)

30-ம் திகதி வெள்ளி முதல்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) லிடோ (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, சிவகுமார், மனோகர், சுந்தரராஜன், நடித்த தேரோட்டம்

2—வது மகத்தான மாதம்
"தேவனே என்னைப் பாருங்கள்"
சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ் நகர்) கெஸினோ (மாத்தளை)
சிவாஜிகணேசன், சாரதா,
விஜயநிர்மலா, மனோரமா, சுந்தரராஜன்
வீ. கே. ராமசாமி, நடிக்கும்



ஞான ஒளி
டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

சென்னையில் 100 நாட்களுக்குமேல் ஓடிய மகத்தான திரையோவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு வண்டாரநாயக்க மாவத்தை 194 ஆ. இலக்கத்தில் 1973ம் வருடம் மார்ச் மாதம் 25 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.